# குறள் நெறி

தமிழ் வாழ்க



கீழையாசிய நாடுகளில் தமிழ்ப்பண் பாட்டுத் தூதுவராய்ச் சென்று சிறப்புடன் மீண்டுள்ள தமிழ்மொழிக்காவலர் **பேரறிஞர் அண்ணாவும்** தமிழ் உரிமை நாடினமைக்காக இந்தியக் காவல் சட்டத்தின் கீழ்ச் சிறைப் படுத்தப்பட்டும் பதவியிலிருந்து நீக்கப் பட்டும், அண்மையில் விடுதலை பெற்றும் உள்ள டாக்டர் சி. இலக்குவனாரும்.

**விலை 25 காசுகள்**

எல்லையில் பகைவரை நில்லாது ஓட்டுவோம்.

# குறள்நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்:
சி. இலக்குவனார், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

| மலர் 2 | திருவள்ளுவராண்டு 1996<br>ஆவணித்திங்கள் 30 15—9—65 | இதழ் 17 |
| --- | --- | --- |

## உள்ளே

இலக்குவனார் எட்டு ... 3
வள்ளுவர் பெயரை வைத்தால் என்ன? ... 4
கனவென்று நினைக்கின்றாய்? (இலக்கிய விளக்கம்) ... 6
அன்பர் அஞ்சல் ... 7
பேரறிஞர் அண்ணா ... 8
குறள் அமுது ... 9
குடும்பக்காதல் (சிறுகதை) ... 10
மூன்றெழுத்து முதல்வர் ... 11
அயூப்கான் போர் வெறி (தலையங்கம்) 12 ...
தொல்காப்பிய விளக்கம் ... 16
நின்று வாழ்க ... 18
மலர்ந்த வாழ்வு (தொடர்கதை) ... 20
அண்ணாப் பத்து ... 22
குறள் அரங்கம் ... 23



"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"
என்று செம்மாந்து கூறிய செந்தமிழ்ப் பாவலர் பாரதியார் பிறந்தாளில் (11-9-65) அவரை நினைவுகூர்ந்து "குறள்நெறி" தன் மதிப்பார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றது.

★

★ குறள்நெறி போற்றுவோம் ★

பெயரால் ஓ்
லூரி இருக்

# இலக்குவனார் எட்டு

— புதுவை நரசிம்மன் —

வாளெடுத்தும் வேல்பிடித்தும் வாழ்ந்திருந்தார் அன்று, வடவருக்குக் கால்பிடிக்க ஆள்பிடித்தார் இன்று,
நாளுக்குநாள் மிகுந்துவிட்டார் கேட்டுவிட்டால் போதும் நாட்டுகின்ற சிறைக்குள்ளே மாட்டுகின்றார் அந்தோ!
ஆளென்று ஆள்பார்க்கும் வேசியைப்போல் இந்தி, அரக்கிக்குக் குரங்காகிப் பாய்விரித்தார், கேட்ட
நாளெல்லாம் தமிழ்நாட்டும் **இலக்குவனார்** தம்மை, நலிவூட்டும் சிறைபூட்டிப் பழிகூட்டிக் கொண்டார்.

தமிழ்நாட்டில் தமிழ்ப்பகைவர் அமைச்சராதல் கேடு; தமிழ்நாட்டி ஓட்டாவிட் டால்நமக்கேன் நாடு.
தமிழ்மக்கள் மூடரானார் தமிழ்ச்சாபக் கேடு, தன்னுரிமை தடைபட்டால் நமக்கெதற்கு வீடு
தமிழ்நாட்டில் கடைஇந்தி படிப்போரைச் சாடு. தமிழ்த்தடைசெய் ஆட்சிவாழ்தல் கேடு, நன்று காடு.
தமிழ்நாட்டில் இந்தியாரார் தமிழரென்று பாடு. தாழ்இந்தி ஓட்டுதற்கே **இலக்குவர்வழி** நாடு.

நற்றமிழ்தான் பயிற்சிமொழி இங்குற்றிட வேண்டி நடைப்பயணம் செயவிருந்தார் தடைசெயச்சிறை
அடைத்தார்
பெற்றமொழி காத்திடவும் நடக்கவுரிமை இல்லை. பித்தர்கள் சனநாயகம் இஃதென்று சொல்வார்
பற்றின்றிச் சிறையடைத்த சிற்றினமே! நாட்டில் பலர்வந்து தமிழ்காக்க உலவும்நாள் வந்தே
புற்றீசல் போலுமிழ்வார் உன்முகத்தில் அன்று புலவர்சேர் **இலக்குவனார்** தம்பெருமை உணர்வாய்.

அழிந்துபோவாய் இழியரசே! ஒழிந்தேபோ! நாட்டில். அருந்தமிழை அழிப்பாரைப் பெருமைசெயும் நாடே
ஒழிந்துபோவாய் தமிழ்ப்பகைவர் தமைவந்து ஆட்சி, உருவேற்றி அமர்த்திவிட்ட தமிழகமே போ! போ!
பழிஇந்தி படிப்பார்தலை இழிந்தமயிர் ஆவார், பழகுதமிழ்க் காப்பார்தமை ஆட்சியில் ஏற்றும்
அழியாத நாள்நோக்கி நடைபோடு நாடே, அரும்புலவர் **இலக்குவனார்** வழிநிற்பாய் இன்றே.

**இலக்குவனார்** சிறைப்பட்டார் என்றசெய்தி கேட்டும், இங்கின்னும் தூங்குகின்ற கொதிப்படையா மக்கள்
உலவுவதைக் கண்டுநாட்டில் உலைகொதித்து நகைக்கும், உயர்மலையைக் கண்டொருநாய் குரைத்தல்போல்
நாட்டில்
பலர்போற்றும் நல்லோரைச் சிறைப்படுத்தும் பொல்லாப் பழியரசாம். இதுகண்டும் கொதிக்காத மக்கள்
நிலவுகின்றார், ஆதலினால் நிலவுகண்டு பொங்கும் நீள்கடலே பொங்கியெழு விழுங்கிடு நாட்டை

வேறு

ஆட்டுகின்ற வையகத்தில் ஆடுகின்ற தமிழ்நாட்டில் அன்பும் நட்பும்
காட்டுகின்ற தமிழ்மக்கள் கவின்தமிழராய் வாழும்நாள் காண வேண்டும்
வாட்டுகின்றார் இந்தியினை ஓட்டுகின்றார் தமிழ்மக்கள் உண்மை என்றே
கேட்டிட்டால் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்தபயன் பெற்றேன் என்பேன்.

கற்றமிழை நசுக்குவாரை நசுக்கல்தான் முதல்வேலை நன்று கூறிப்
பெற்றதமிழ்க் காப்பாரைப் பேருலகில் போற்றிடுவோம் பேசும் நல்ல
கற்றவர்கள் போற்றுகின்ற கன்னிமொழிக் காப்பாளர் காட்டும் அன்புப்
பற்றுடையார் **இலக்குவரைச்** சிறைசெய்த ஆட்சியினைப் போக்கி வாழ்வீர்.

வேறு

இந்தி படிப்பார்கள் இங்குற்ற பாவியர்கள், நந்தமிழ்ப்பற் றில்லார் நடைப்பிணங்கள்—சொந்தமொழி
செந்தமிழைக் கல்விமொழி செய்வீர் எனச்சொலாதார், இந்தநாட்டுப் பேயரென்பேன் இன்று.

# "வள்ளுவர் பெயரை வைத்தால் என்ன?"

— புலவர் தென்னகன்
கடலூர்.

தமிழகத்தில் மற்றுமொரு பல்கலைக்கழகம்! தமிழ்ப் பெருமக்கள் மகிழ்வுகொள்ளும் செய்திதான். அம்மகிழ்வு நிலையாக நெஞ்சிலிருக்கும் வகையில் இல்லையே என்று எண்ணும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. மான மறவர்கள் வாழ்ந்த பாண்டிய மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுவது, அரசினர் ஏற்படுத்துவது உண்மைப் பாராட்டிற்குரிய செயலாகும். தமிழ் தவழ்ந்த தங்கத் தொட்டிலாம் மதுரைத்திருநகரில் ஏற்படும் பல்கலைக் கழகமெனும் மலரில் தமிழ்மணம் கமழப்போவதாகத் தெரியவில்லை. கழகம் வைத்துக் கனிமொழி வளர்த்த மண்ணில் ஏற்படும் பல்கலைக் கழகம்தமிழுள்ளங்கள்மகிழ்வு கொள்ளும் நிலையில் இல்லை. மதுரையில்பல்கலைக்கழகம் உருவாகும் என உறுதியாகப் பேசப்பட்டபோதே என்ன பெயர் வைப்பது என்ற வினவும் சேர்ந்தே பேசப்பட்டது. அக்கால மதுரை வாழ்ப்பெருங்குடி மக்களும், பேராசிரியர்களும் பெரியோர்களும், ஒருமித்த நிலையில் ஒரு பெயரைக்கூறினர்; **"வள்ளுவர் பல்கலைக்கழகம"** என்பதுதானது.

**"திருவள்ளுவர் பல்கலைக்கழகம்!"** என்னும் போதே இனித்தது; தேனில் நனைத்த பலாச்சுளையைத்தின்பது போல் சுவைத்தது. எத்தனை முறை சொல்லிப்பாரத்தாலும் இன்பம்! இன்பம்!; இப்படியெல்லாம் இன்புற்ற நெஞ்சங்கள் எண்ணிலடங்கா. "அரசு இப் பெயர் வைக்கும்; தமிழரசுதான் இங்கிருப்பது; ஆளுவதும் தமிழரல்லவா? ஆளுங்கட்சியின் தலைவரும் பச்சைத் தமிழரல்லவா? மதுரையில் ஏற்படும் பல்கலைக்கழகம் திருவள்ளுவர் பெயரால் திகழப்போவது உறுதி" என்று அறுதி யிட்டு ஐயம் சிறிதுமின்றி நம்பினர் நல்லோர்.

"நல்லோர் நம்புவன எல்லாம் நடைபெற்று விட்டால் எதிர்கட்சிகளுக்குத்தான் வேலை இல்லையே! அதனால்தானோ என்னவோ, சேக்கிழார் வழித்தோன்றல் என்னும் சிறப்பிற்குரிய பெருமகன், "பெயரில் என்ன இருக்கிறது? பேதையரே!" என்னும் பெருநோக்கில் நல்லோரின் எண்ணத்தில் மண்ணிட்டிருக்கிறார்!

பரந்த மனமும், விரிந்த உணர்வும் படைத்த நமது முதலமைச்சரை எண்ணும் போது, **"தமிழ்ப்பற்றும், தாய்மொழி உணர்வும் கெட்ட பிறகு பதவி ஒரு கேடா"** என்றுசொல்லத் துடிக்கிறது நா.

சட்டமன்றத்தில் மதுரைப்பல்கலைக்கழகம் பற்றி பேசும்போது ஒரு உறுப்பினர் 'பாண்டியன் பல்கலைக்கழகம்' என்று பெயரிருக்கலாம் என்று கருத்தறிவித்திருக்கிறார்; மற்றொருவர் 'மதுரைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்ற பெயர் வைக்கவேண்டும் என்றுரைத்திருக்கிறார்; இன்னுமொருவர், 'மீனாட்சிப் பல்கலைக் கழகம்' என்ற பெயரிக்கவேண்டும் என்று தன் 'பக்திப்பண்பை' வெளிப்படுத்தி இருக்கிறார். 'திருவள்ளுவர் பல்கலைக்கழகம்' என்று தேனினும் இனிய திருப்பெயர் வைப்போம் என்றுமொருவர் சொல்லியிருக்கிறார். மேற்கண்ட எப்பெயரையாவது வைத்திருந்தால் நம்முதல்வரைத் தமிழக முதலமைச்சர் என்று துணிவோடு அழைக்கலாம்; தமிழர்கள் வாழும் தமிழகத்திற்குத் தமிழரே முதல்வர் என்று ஐயமின்றிக் கூறலாம். ஆனால், திரு. பக்தவச்சலனார் அவர்களோ, பாண்டியனும் வேண்டாம்; தமிழும் வேண்டாம்; திருவள்ளுவனும் தேவை இல்லை' என்று தம் தமிழ் தவழும் நாவால் சொல்லி இருக்கிறார்.

தமிழகத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகம் தமிழின் பெயரால் அழைக்கப்படக்கூடாதா? தமிழுக்கும், தமிழகத்திற்கும், தமிழருக்கும் மாபெரும் உண்மைப் பெருமையை மாநிலத்தில் பெற்றுத்தந்த 'வான்புகழ்' குறளைத்தந்த வள்ளுவர் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமையக் கூடாதா?

மூவேந்தர் இனத்திலேயே முதல் வேந்தரினம் என்று வரலாற்றாளர்கள் கூறும் பாண்டியர் தம்பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமையக்கூடாதா? ஏன் இந்த இழிநிலை? இருக்கலாமா இந்தக் கீழ்நிலை?

'உயிரினும் மானம் உயர்ந்தது' என்போர் எண்ணிப்பார்ப்பாராக!!

பக்தவச்சலம் பெயரால் ஓர் தொழிலியற் (பாலி டெக்னிக்) கல்லூரி இருக்கும்போது பாண்டியன் பெயரால் பல்கலைக்கழகம் இருக்கக் கூடாதா?

மதுரைப் பல்கலைக்கழகம் என்ற பெயர் இருக்கட்டும் என்னும் பெருமகனார், 'காஞ்சிபுரம் தொழிலியற் கல்லூரி' என்று பெயரை மாற்றுங்கள்என்று அறிவுரைசொல்லி, ஆவன செய்தாரா? வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்ட பல்கலைக்கழகம், சென்னைப்பல்கலைக்கழகம்என்றுஅழைக்கப்படுவதற்கு நியாயம்இருக்கிறது.அவன் அந்நியன்; பாண்டியன் என்றோ; வள்ளுவனென்றோ பெயர் வைப்பது தவறு என்று அவன் கருதலாம். பக்தவச்சலம் அவ்வாறு கருதலாமா? **சேக்கிழாரின் வழித்தோன்றல் செந்தமிழ் உணர்வுக்கு மாசு தேடலாமா?** வெள்ளைக்காரன் செய்யும் காரியத்தைத் தமிழன் செய்யலாமா? அறியாமையால் இருந்த போது ஏற்பட்ட அவலம் உரிமை வாழ்வு பெறும்போது நடக்கலாமா?

**மதுரைப் பல்கலைக்கழகம்என்று பெயர் வைக்கும் திரு. பக்தவச்சலம் அவர்கள் வள்ளுவர் பெயரால் ஏன அழைக்கக்கூடாது என்பதற்குக் காரணம் சொல்லட்டும்!** பாண்டியன் பெயரால் அழைத்தால் ஏற்படும் பழி என்ன என்று சொல்லட்டும்! அல்லது. மதுரையின் பெயரால் அழைக்கப்படுவதால் ஏற்படும் நன்மை என்ன என்றாவது கூறட்டும்!

வள்ளுவர், பாண்டியன், தமிழ் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு பெயரால் பல்கலைக்கழகம் அமையுமேல் மேலிடத்தாரின் எதிர்ப்புகளும், குறுகிய நோக்கமிது என்னும் 'கொட்டு'களும், கிடைக்குமே. அடுத்த சும் பதவிக்கு ஆள் அணியமாக்கப்படுமே என்ற அச்சத்தில் பக்தவச்சலனார் இப்படிச் செய்கிறாரா? தம்முடைய 'தாசர்'ப்புத்திக்குத் தரக்குறைவு ஏற்படுமே என்று அஞ்சுகிறாரா? என்றறியும்ஆவல் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதை நீக்க வேண்டிய பொறுப்பும் முதலமைச்சருக்கு இருக்கிறது. 'வள்ளுவர் பல்கலைக்கழகம்' 'மதுரைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்று அழைப்பதற்குப் பக்தவச்சலனார் அஞ்சுவதற்கு ஒரு காரணமும் இருக்கிறது என்ற சில அரசியல் நோக்காளரின் சொல்லும் நம் காதில் கேட்கிறது! அது என்ன?

மதுரையில் பல்கலைக்கழகம் என்றபோது மதுரை வாழ் மக்களின் குரல்கள் வள்ளுவர் பெயரால் அமையட்டும் என்று ஒலித்தன. அதே பெயரில் அழைக்கப்படும் என்ற உறுதியும், தெளிவான முடிவும் காணப்பட்டது. உத்தமர் நேரு அவர்கள் திடீரென மறைந்த போது, நேருவின்மேல் தங்களுக்கு பக்தி அதிகம் என்று காட்டிக்கொண்டு வரவு செலவு பார்க்கும் சில அரசியல் 'எத்தர்கள்' மதுரையில் உருவாகும் பல்கலைக்கழகம் நேருவின் பெயரால் அழைக்கப்படவேண்டும் என்றனர். அதை மறுத்தால் எங்கே தங்களை அரசியல் வண்ணம் பூசி நெருக்கடியான நிலைக்கு ஆட்படுத்துவார்களோ என்ற அச்சத்தால் சில நல்லவர்களும் வாய்மூடி இருந்தனர். ஆனால், சிலர் நேருவின் பெயரால் பல அமைப்புகள் உள்ளன; எனவே, மதுரையில் உருவாகும் பல்கலைக்கழகம் வள்ளுவர் பெயராலேயே இருக்கட்டும்; ஏற்கனவே எடுத்த முடிவை, மக்களின் உள்ளார்ந்த ஆவலை, இடையிலே மாற்ற வேண்டாம் என்றனர்.

இத்தகைய முன் நடந்த வரலாற்று நிகழ்ச்சியை நினைக்கும்போது பக்தவச்சலனார், யாருக்கோ அஞ்சி, பதவிப் பாசத்தால் "அதுவும் வேண்டாம், இதுவும் வேண்டாம், பொதுவாகவே இருக்கட்டும்" என்ற முடிவுக்குக் கொண்டு வரப்பட்டார் என்று திண்ணமாக எண்ண இடமிருக்கிறது. பேராயக்கட்சிதான் தமிழைக்காப்பது என்று தம்பட்டம் அடிக்கும் தம்பிகள் கூறட்டும்; எங்கே உங்கள் மொழிப் பற்று? வள்ளுவர் பெயரால் பல்கலைக்கழகம் அமைக்கும் எண்ணமில்லாப் பக்தவச்சலனாரைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்? முதலமைச்சருக்குப் பற்றேற்றி வள்ளுவர் பெயரால் பல்கலைக்கழகம் அமைக்க முயற்சி செய்வீர்களா?

எதிர்க்கட்சியினர் சொல்வதாலேயே நான்கும் மூன்றும் ஏழல்ல என்றா சொல்வது?

"உள்ளே கலந்து தமிழ் உணர்வை ஊட்டி, நல்ல பல செயல்களை நாங்கள் செய்வோம்" என்று புதுத்தாலி கட்டிக்கொண்டு 'கண்ணகி' நாடகமாடும் நல்லவர்களே! நாயென்றும், பேயென்றும் திட்டிய மொழியைப்பழமென்றும், பணிவென்றும் போற்றும் பாவ(ா)லர்களே! எங்கே உங்கள் தமிழ் உணர்வு? தமிழ்க்காதல்?

பேராயக்கட்சியினரே! இதுதானா உங்கள் தமிழ்ப்பற்று? இன உணர்வு? பெயர் வைப்பதிலே என்ன இருக்கிறது என்று பேசும் பெரியவர்களே! நீவிர் பெற்ற பிள்ளையை 'நாய்' என்று அழைப்பீர்களா?

பெயரில்தான் ஒன்றும் இல்லையே, வள்ளுவர் பல்கலைக்கழகம் என்றுதான் வைத்துவிட்டுப் போங்களேன்!

இறுதியாக ஒன்றே ஒன்று!

**எதற்கு வேண்டுமானாலும் தீமை செய்யுங்கள்! தமிழுக்குத் தீமை, தமிழினத்திற்குத் தீமை செய்ய எண்ணாதீர்கள்! யார் மன்னித்தாலும் காலம் மன்னிக்காது!**

இலக்கியவிளக்கம்

# கனவென்றா நினைக்கின்றாய்?

வித்துவான் அன்துவான் ரெழினா

உலகோர் அனைவரும் அள்ளியள்ளிப் பருகி உய்ய, அறிவுரையை வாரி வழங்கும் பொதுமறையை, ஆக்கித்தந்த வள்ளலாம் வள்ளுவரைப் படைத்துப் புகழ் சான்றது நம் தென்னகம். மனத்துக்கண் மாசிலராகிக், குணமென்னுங் குன்றேறி நின்று, நிலையிற்றிரியாது அடங்கி வாழ்ந்து பெரியார்களைக்கொண்டது நம் தமிழகம்.

நயத்தக்க நாகரிகம் முதிர்ந்த நந்தமிழ் நாட்டில், தொல்குடிப் பிறந்த மகளிர், காதலொருவரைக் கைப்பிடித்தனர்; அவர் காரியங்களில் கைகொடுத்தனர். சாதமும் படைத்தனர்; தெய்வச் சாதியும் படைத்தனர். மணாளனைப் பிரிய நேர்ந்தபோது துடித்தனர்; கண்ணீர் வடித்தனர். இவர்களுடைய காதல் வாழ்வினைக் குறுந்தொகை, கலித்தொகை முதலிய சங்க விலக்கியங்களாலறிகிறோம்.

தலைவன் பிரிவு நீட்டித்தபோது கண்கலங்கிய தலைவி ஒருத்தி, இதோ—நம்முன் சொல்லோவியமாகக் காட்சி தருகின்றாள்.

**இனிக்காண்போம் அவளை.**

பிறன் மனை நோக்காத பேராண்மை கொண்ட இளைஞனொருவன், கற்புங்காமமும் நற்பாலொழுக்கமும் மெல்லியல் பொறையும் நிறையுங்கொண்ட கன்னியுடன் கூடிப் 'பாலொடு தேன் கலந்ததென' அவள் கனியிதழ் சுவைத்துக் களிப்புற்றிருந்தான். தாளாற்றித் தந்த பொருளால் தக்கார்க்கு வேளாண்மை செய்ய நினைத்தான் அவன்.

கண்ணே என்றான். கண்மணியே என்றான். இன்பவுருவே என்று இறுகத்தழுவினான். 'இல்லோர் வாழ்க்கை இரவினும்இளிவு' ஆதலின், சென்று பொருள்தேடி விரைந்து வருகின்றேன் என்றான். குந்தித்தின்னக் குன்றன்ன பொருளிருக்க, இன்னுமா பொருள் வேண்டும் உமக்கு! என்றாள் அவள் அன்பே, 'உள்ளது சிதைப்போர் உளரெனப்படார்'— ஆதலின், நான் தீதின்றிப் பொருள்கொண்டு, ஓடோடி வருகின்றேன் என்றான். 'செல்லாமையுண்டேல் எனக்குரையும்' எனச்சொல்லி நடந்தாள் செல்வி. 'வினையே ஆடவர்க்குயிர்' ஆதலின், சென்று மீள்கின்றேன்—ஆற்றியிரு—எனப் பின் தொடர்ந்தான் செல்வன். மனையுறை மகளிர்க்கு ஆடவரே உயிர்'—உம்முயிர்தேடநீர் செல்லின், என்னுயிர் காக்க நானும் வருகின்றேன் என்றாள். 'புயல் துளிமாறிய போக்கரு வெஞ்சுரத்தைக் கடக்கவேண்டும். 'உன்தளிரன்ன எழில்மேனி கவின் வாடும்' ஆதலின், இங்கேயே இரு என்றான். 'நும்மொடுவரின் இலை தீய்ந்த கானமும் எனக்கு இனியதாம்' வருகின்றேன் என்றாள். இல்லை—நீ, தோழியுடன் கூடியிரு; உன்னைக் கட்டியணைத்திடக் கார்காலத் தொடக்கத்தில் கடுகிவருகின்றேன் எனக்கூறிப் பிரிந்தான் அவன். தற்காத்துத் தகை சான்ற சொற்காத்து நின்றாள் தலைவி.

**கார் காலம் வந்தது; சட்டழகன் வந்திலன்.**

கலங்கினாள் காரிகை; அறிந்தாள் தோழி கண்டாள் தலைவியை ஏனம்மா இவ்வாட்டம்! என்றாள். தெரியாதா உனக்கு! 'கார் வரும்போது காரிகையைத் தழுவி மகிழ வந்திடுவேன்' எனக்கூறிச்சென்றார். கார்காலமும் வந்தது; கண்கவர் காதலர் வரவில்லை. 'கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது; ஆவின் பால் நிலத்தில் விழுந்ததுபோல், எனக்கும் ஆகாது என்னைக்கும் (எனை—என் தலைவன்) உதவாது' என் இளமை அழிகின்றது பொருள் தேடச்சென்றவர் எங்குளரோ! என்ன செய்கின்றாரோ? என்னை நினைக்கின்றாரோ? என் நினைவால் வினை முற்றாது மீண்டு, தம்செம்மல் உள்ளத்தைச்சிதைத்துக் கொள்ளுவரோ? என யான் ஏங்கி நிற்கின்றேன். "தமிழ் மகளிர்க்குரிய தனிப்பண்பை எங்கே புதைத்தாய்? எவ்வளவு ஆழத்தில் புதைத்தாய்! உத்தமனைப்பிரிந்தபின்னும் உயிர்கொண்டா உலாவுகின்றனை? நின்வல்வரவு வாழ்வார்க்குரை' எனச்சொல்லிய, மண்ணில் பிறந்த பெண்ணாநீ? நன்று நன்று; மிக மிக நன்று" எனக்கூறிக் கேலி செய்து நகைப்பதுபோல் முல்லையரும்பி

[19-ஆம் பக்கம் பார்க்க]

# அன்பர் அஞ்சல்.

வளர்க தமிழ்! வாழ்க இவ்வையகம்!!

தமிழ்காக்கும் வீரரே வணக்கம். நான் கோவையின்கண் அமைந்துள்ள பூ. சா. கோ கலைக்கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பொருளாதாரத்தைச் சிறப்புப்பாடமாக எடுத்துத் தாய்மொழியில்பயின்றேன் என்னுடன் இருபத்தோர் மாணவர்களும் பயின்றூர்கள். நாங்கள் அனைவரும் நன்முறையில் வெற்றிபெற்று விட்டோம். அதுமட்டுமல்ல எங்களில் ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் முதற்பகுதி ஆங்கிலத்தில் வெற்றிபெற்றுவிட்டோம். இது ஒன்றே போதும் தமிழ்வழி பயின்ற மாணவர்களுக்கு ஆங்கில அறிவு உண்டு என்பதற்கு. ஆனால் வாழ்க்கைக்குத் தேவையான செல்வங்களைத் தேடுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை இதற்கு அரசாங்கம்தான் காரணம். தமிழ்வழி கற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தேடித் தர தவறிவிட்டது. இதனைக்கண்டுதான் மாணவர்கள் தமிழில் பயில முன்வருவதில்லை. ஆகவே முதலாவதாக தமிழில் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பினை நல்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் தமிழில் பயில முன்வருவார்கள். பிறகு தமிழில் பயில மாணவர்கள் முன்வரவில்லை என்று வாய்கிழிய பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இரண்டாவதாக ஒரே கல்லூரியில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டும் போதனை மொழியாக இருப்பதை அகற்றிவிட்டு தமிழை மட்டும் போதனை மொழியாக்க வேண்டும். மூன்ருவதாக பல்கலைக்கழகம் தருகின்ற வினுத்தாள்கள் ஆங்கிலத்தில் இருப்பதை அகற்ற வேண்டும். தமிழில் விடைகள் தருகின்ற மாணவர்களுக்கு வினுத்தாள்களும் தமிழிலேயே இருக்கவேண்டும். நான்காவதாக எல்லாக் கல்லூரிகளிலும் தமிழில் பயிலுவதற்குத் தேவையான பாடப்புத்தகங்கள் கிடைக்கும் பொருட்டு தமிழில் புத்தகங்கள் எழுதுவதற்கு முன்வருகின்ற ஆசிரிய பெருமக்களுக்கு ஆதரவு தரவேண்டும். கடைசியாக எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை போதனை மொழியாகக் கொண்டு வரவேண்டும். இதற்கு ஆதரவு நல்க வேண்டுமென தமிழ்வழிகற்ற மாணவர்கள்சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இங்ஙனம்,

க. முத்துவேல்.

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் [484]

திரு.

டாக்டர் சி. இலக்குவனர் அவர்கட்கு, வணக்கம். "குறள்நெறி" ஏடு மேலும் எம்முறையில் வெளிவரின் மக்கட்கு நன்மை பயக்கும் என்பது பற்றிச் சில கூற விரும்புகிறேன். இற்றைய தமிழகத்தில் "குறள்நெறி"யை பரப்ப வேண்டும் என்று பலர் எண்ணுகின்றனர். சிலர் செயல்படுகின்றனர். (தற்போது மதுராந்தக குருகுலத்தின் கிளையினர் சென்னையில் கிழமைதோறும் திருக்குறள் விரிவுரை நடத்தி வருவதாகத் தெரிகின்றது. அவர்கள் "திருக்குறள்" பற்றிய பலநூல்களை ஆராய்ந்து (32) நட பக்க அளவில் ஈ0 காசு விலையில் சிறு சிறு நூலாக வெளியிட்டு வருகின்றனர். அந்நூல் கருத்துச்செறிவுள்ளதாகவும் எந்நிலையினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாவும் உள்ளது)

சிலர் தமிழராய் பிறந்தும் தமிழே படித்தும் பேசியும் வாழ்ந்தாலும் "திருக்குறளின்" அருமை பெருமையைத் தெரியாமல் இருக்கின்றனர். இங்கிலையில் தங்கள் "குறள்நெறி" ஏடு துவக்கப்பட்டது. அது, குறள்நெறியை பரப்புமென்றும் தமிழ் வளர்ச்சிக்காக பாடுபடுமென்றும் கூறி வெளிவந்தது தன் பணியை பல இன்னல்கட்கிடையிலும் செம்மையாக செய்து வருகின்றது.

கீழ்க்கண்ட சில திட்டங்கள் "குறள்நெறிக்கு" ஆக்கந்தருமென கொடுத்துள்ளேன்.

1. "குறள்நெறி வினு விடை" பகுதி என ஒன்று தொடங்கி குறளைப் பற்றிய ஐயத்தை அகற்றவேண்டும், மேற்கண்ட வினவிடை பகுதிக்கென ஒரு குழு, அமைதல் நல்லது. அக்குழுவினர் திருக்குறள் பற்றி வெளிவந்துள்ள நூல்களை படித்தவர்களாகவும், உலக செய்திகளை பல ஏடுகளின் வாயிலாக அவ்வப்போது காண்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2 குறள்நெறி விளக்கச் சிறுகதைகள், தொடர்கதைகள் தொடர்ந்து வெளிவரச் செய்ய வேண்டும்.

3. குறளைப் பற்றி மேனுட்டறிஞர்கள் சொன்ன கருத்துக்கள் நம்நாட்டவர்கள் சொன்னகருத்துக்கள், அதன் புதைபொருள்கள் ஆகியவைகளை அவ்வப்போது வெளியிட வேண்டும்.

4. உலகத்தில் எப்பகுதியில் திருக்குறள் பற்றிய செய்தி வந்தாலும் அது குறள்நெறியில் இடம்பெற வழி செய்தல் வேண்டும்.

5 குறள்நெறியின் மேன்மையை மாற்று மொழியினரும் அறிந்துகொள்ள-ஆங்கில ஏடு விரைவில் துவக்கவேண்டும்.

6. பல அறிஞர்கள், புலவர்கள் பல நூல்களில் கூறியுள்ள திருக்குறள் பற்றிய விளக்கக் கருத்துக்களை சிறு சிறு துனுக்குகள் அளவில் போட்டு விளக்கவேண்டும். (பல இதழ்களில் வருபவைகளையும்)

மேற்கண்ட கருத்துக்களை சொல்லுதல் எளியவாம் எனத் தள்ளாமல், கூடியவரை செயல்படுத்தினல் நன்மை பயக்குமென நம்புகிறேன். அன்பன்,

பா. நல்லபெருமாள், பெங்களூர்.

# மக்களாட்சி முறை வெற்றி பெற

## பேரறிஞர் அண்ணாவின் பெருந்தொண்டு

டாக்டர் சி. இலக்குவனார்



மக்கள் நன்மைக்காக மக்களால் நடைபெறுவது மக்களாட்சியாகும். இக்கொள்கை தமிழகத்திற்குப்புதிதன்று. முடிசூடிய மன்னரும் தாம் மக்கள் நன்மைக்காகவே ஆளுகின்றோம் என்பதை நன்கு உணர்ந்து நாட்டை ஆண்டனர். அதனாலேயே "நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" எனப்புகன்றனர். வாழ்வியல் உரைத்த வள்ளுவர் பெருமானும் "குடிதழீஇக்கோலோச்சும் மாநில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு" என மக்களுக்காக ஆளும் மன்னனின் மாண்பை எடுத்துரைத்தார்.

வழிவழியே மன்னர்களே நாட்டின் காவலர்களாய் நல்லாட்சிக்குப் பொறுப்புடையரேனும், ஊர்கள் தோறும் அவைகள் அமைந்து மக்களுக்காம் தொண்டுகளைச் செய்து வந்தன. பாராளுமன்ற ஆட்சி முறையின் பிறப்பிடம் இங்கிலாந்து என்றால் ஊராட்சி முறையின் பிறப்பிடம் தமிழ் நாடாகும். ஊராட்சி முறைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவிதம் இன்றும் போற்றிக்கொள்ளற்பாலது. அன்று உறுப்பினர்களைப் பலவகைத் தகுதிப்பாடுகளுடன் பொறுக்கிஎடுத்தார்கள். ஆனால் இன்று தேர்ந்து எடுக்கிறோம். தேர்ந்து எடுப்பதினும் கட்சி ஆட்சி முறை புகுந்துள்ளது. அக்கட்சி ஆட்சிமுறை நமக்கு முற்றிலும் புதிதே. இதற்குத்தாயகம் இங்கிலாந்துதான். ஆங்கிலேயர்களால் ஆளப்பட்ட நாம் அவர்கள் ஆட்சிமுறையைப் பின்பற்றுவதில் வியப்பில்லை புதுமையில்லை. ஆனால் கட்சி ஆட்சிமுறை அங்கு வெற்றிபெற்று வருவதுபோல இங்கு வெற்றி பெற இன்னும் பல பத்தாண்டுகள் செல்ல வேண்டியிருக்கும் போலும்.

தமிழ் நாட்டில் சாதி வெறி நாளுக்கு நாள் நஞ்சுபோல் ஏறி வருகின்றது. மக்களில் பெரும்பாலோர் வறுமையில் உழலுகின்றனர். மூட நம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கின்றனர்; கல்வியறிவும், கற்றவாறு நடக்கும் உரமும் பெரும்பாலோர்க்கில்லை. ஆகவே கொள்கை வழியில் கட்சிகளை நாடாமல் வேறு காரணங்களுக்காகக் கட்சிகளைச் சாருகின்றனர்.

இந்நாட்டில் அயலவர் ஆட்சியை அகற்றப் போரிட்டது காங்கிரசுக் கட்சிதான். அந்த ஒரு காரணத்தைக்கொண்டே இன்னும் நூறாண்டுக்குத்தானே நாட்டை ஆள வேண்டுமென்ற பெரு விருப்பம் கொண்டுள்ளது.

ஏறக்குறைய கால் நூற்றாண்டாக நாட்டை ஆண்டுவருகின்றது.

இங்கிலாந்தில் இரண்டாம் உலகப் போரைத் திறமையாக நடத்தி வெற்றி கண்ட சர்ச்சிலையும் அவர் கட்சியையும் போர் முடிந்த உடனே மக்கள் புறக்கணித்து விட்டனர். போரை வென்றதன் காரணமாக தாமும் தம் கட்சியும் வழி வழியாக நாட்டை ஆளும் பொறுப்பைக் கொள்ளவேண்டும் என்று அங்குத்தேர்தல் போராட்டம் நடத்திலர். இங்கோ காங்கிரசுக்கடசி நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்த கட்சி என்று பெருமை பேசிக்கொண்டு தன்னையே என்றும் ஆளும் கட்சியாக வைத்துக்கொள்ள விரும்புகின்றது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரசுக் கட்சிக்கு—ஆளும் கட்சிக்கு—எதிர்க்கட்சியாக உருவாகி வருவது திராவிட முன்னேற்றக் கழகம் தான். அடுத்த தேர்தலிலேனும் காங்கிரசுக் கட்சி ஆளும் நிலையிலிருந்து அகற்றப்படவேண்டும். இன்றேல் மக்களாட்சி முறைக்கு-கட்சியாட்சி முறைக்குச் சாவுமணி அடித்துவிட்டதாகவே கருத வேண்

# குடும்பக் காதல்

வைரி. தரளம், திருச்சி.

சிவ ஒளி சிறந்த செம்மல். செந்தமிழ்ப் பற்றுடையவர். ஊர் போற்றும் உத்தமர். அருள் உள்ளம் நிரம்பியவர். அருள் வேண்டு பவர். அத்தகையவர் வாழ்ந்த ஊர்தான் சிறுகனூர். சிறந்த செல்வம் பெற்றவர்தாம். சீலம் நிறைந்தவர்தாம். சிறுகனூரில் அவர் பெயர் இலங்காத மக்கள் இலர்; அவருடைய மனைவியோ சொல்ல வேண்டியதில்லை. அவர் செய்த 'நற்பேறு' என்றுதான் சொல்ல வேண்டும்.

கணவனைப்போல நல்ல எண்ணமும் நல்லருளும் கொண்டவர்தாம். ஆனல் தனக்கு மற்றவர்களைப்போல் குழந்தை இல்லையே என்ற குறையே தவிர வேறென்றும் இல்லை. நல்ல வீடு; நாற்புறமும் திறந்தவெளி வீட்டிற்குள்ளேயே உலவலாம்; எடுபிடிக்கு ஆள்; ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்தது அவர்களுடைய வீடு. மரபோ வீரசைவம். ஏவலுக்குப் பணிந்து செய்ய ஆள்.

காலையில் இரண்டு குவளைப்பால். மதியம் நிறையுணவு; இரவு சிற்றுண்டி; வீட்டில் பசு ஒன்று உண்டு. வைக்கோல் எடுத்துப்போட்டு விட்டுக் கையில் திருக்குறளையும் திருச் சதகத்தையும் வைத்திருப்பார். வீட்டின் முகப்பிலுள்ள மன்றத்தில் உட்கார்ந்து படிப் பார். வருவோர் போவோர் படிப்பதைக் காதில் வாங்காமல் செல்ல முடியாது.

தெரியும் சிவஒளி படிக்கிறார் என்று. உடனே செவ்வேள் வருவார். இருவருக்கும் திருச்சதகத்தைப்பற்றி உரையாடல் நடக்கும். இன்னொரு நாள் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நடக்கும். செவ்வேள் அவருடைய நண்பர். சிவஒளி வீட்டுக்கு வருபவர். சிவஒளி மருமகனாக வந்ததிலிருந்து அவருடன்தான் பழக்கம். மிக இனிமையாக உரையாடிக் கொண்டிருக்கும்பொழுதில் 'உணவு உண்ண வாங்க' என்ற செந்தேவியின் குரல் ஒலிக்கும். இவர் தமது நண்பர் செவ்வேளை 'வாங்க' உண்ணலாம் என்றழைத்தவாறே சென்றிடு வார். வீட்டில் செந்தேவின் பரபரப்பைக் காணவேண்டுமே! படபடத்துக்கொண்டுதான் பரிமாறுவார்கள்.

பக்கத்திலுள்ள பரமாயி இதையெல்லாம் கவனித்துவிட்டு 'ஐயாரை இப்படியெல்லாம் ஏன் பேசறீங்க' என்று சமாதானத்துக்கு வந்துவிடுவாள். சிவஒளி வெற்றிலைப் பாக்குப் போடும் பழக்கமுடையவர் 'அடைக்காய் பெட்டியை எடுத்துவா!, என்பார் உடனே தேவி எடுத்துக்கொண்டு வந்து கொடுப்பார். பசுக் கத்தியது; செந்தேவி குவளையில் நீர் மொண்டு சென்று வைத்து விட்டுக் கன்றைப் பிடித்து தூணிலே கட்டிவிட்டுப் பால் கறந்து கன்றை அவிழ்த்து விட்டார். காகம் (கோலா கலம்) கரைந்தது விருந்தொன்று வந்தது.

அது வேறு யாருமல்ல. சிவஒளி மைத்துனர் முதுவளவன். வா! அண்ணா!என்று அன்போடு அழைத்துவிட்டு விருந்துக்கு வேண்டியதை பரபரப்போடு கவனித்தார்கள் சிவஒளி முதுவளவன் இருவரும் கழனியைச் சுற்றிப் பார்த்துவரப் போனார்கள். பரமாயி வீட்டு வெளிப்புறத்திலுள்ள தொழுவத்தைக் கூட்டிவிட்டுச் சென்றார். ஊர்மக்கள் சிவஒளி மருமகனாக வந்ததிலிருந்து அவருடைய முன்னேற்றத்தைப் பற்றிப் பேசிக்கொண்டார் கள். சொந்த ஊரான வளனூரையும் நான் கைந்து ஆண்டுகளாக மறந்து இப்படி மாறு வார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. வீட்டில் இருவருக்கும் உணவு பரிமாறினள் செந்தேவி.

இருவரும் உரையாடல் தொடங்கியது. என்ன மைத்துனரே! முதல் காலம்போல் 'இப்ப எதுவும் கிடைப்பதில்லே'. வந்தவர் சிறிது கற்றவர். நல்ல மலர்ச்சி உள்ளம் பெற்றவர். புதுமைக் கருத்துக்களை வரவேற் பவர். வள்ளுவர் சொல்வதுபோல் 'இன்முகம்' காணுமளவு என்று சொல்லி அமைந்தார்.

விருந்து முடிவுற்றது. இருவரும் சில நிமிடம் உரையாடினர்கள். அவர்களுடைய பேச்சில் சுவை கலந்திருந்தது. சிவஒளி சொல்ல ஆரம்பித்தார். 'அந்தக் காலத்தில் எங்க வீட்டில் நெய், மோர், பலாச்சுளை, இலந்தவடை, நெல்லிவடை, சொத்தவரை, எலுமிச்சை, நாரத்தை ஊறுகாய் முதலியவை இருக்கும். பண்ணியமும் இடுவார்கள்' என்று சொன்னபோது முதுவளவனுக்கு உமிழ்நீர் சுரக்க ஆரம்பித்தது. வெளிவாயிலில் இருவரும் அமர்ந்தனர்.

வெளிவாயிலில் உட்கார்ந்திருந்த பரமாயி 'நம் ஐயா வீட்டிலே பிள்ளையில்லாத குறையைத் தவிர வேறென்றுமில்லிங்க'

தொடர்ச்சி 15-ஆம் பக்கம் பார்க்க.

டும். ஒரு கட்சி ஆட்சிமுறை வேரூன்றிக் கொடுங்கோன்மை வெற்றிபெற ஏதுவாகும்.

செங்கோன்மை தழைக்க—நாட்டு மக்கள் உரிமையோடு வாழ ஒரு கட்சியே என்றும் ஆளுதல் ஒழிய வேண்டும். ஆகவே **பேரறிஞர் அண்ணாதுரை** அவர்கள் தமது கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமென்று மக்களாட்சியில் நம்பிக்கையுடையோர் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஐம்பத்தேழு ஆண்டை அடையும் பேரறிஞர் அவர்கட்கு எல்லா ஆற்றல்களும் உள. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தந்தையும் தலைவரும் அவரே. தம் தோழர்கட்குக் "கடமை, கட்டுப்பாடு, கண்ணியம்" என்பவற்றில் நம்பிக்கை கொள்ளச் செய்து மக்களாட்சி நெறி மாண்புற அயராது உழைத்து வருகின்ற அரசியல் பேரறிஞராவர்.

"வினைவலியும், தன் வலியும், மாற்றான் வலியும் துணை வலியும், தூக்கிச் செயல்" புரியும் திண்மையும், "பொருள், கருவி, காலம் வினை, இடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்" புரியும் ஆற்றலும், ஞாலம் விரைந்து தொழில் கேட்பத் தாம் கூற வேண்டியவற்றை நிரந்தினிது சொல்லும் சொல் வன்மையும் "கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து; மற்றதன் குத்து ஒக்க சீர்த்த இடத்து" என்ற அரசியல் செயல் முறையும் உடைய அரும்பெரும் தலைவர் **பேரறிஞர் அண்ணா**. அவருக்கு இணை அவரே யாவார். தலைவர், பேச்சாளர், நடிகர், கவிஞர், ஓவியர், எழுத்தாளர் எனும் பல புகழ்நிலைகட்கு முரியராய், அடக்கமும், அன்பும், எளிமையும், இனிமையும் அணிகலன்களாய் உடையவர்.

இவர் இன்னும் பல்லாண்டு நிறை நலனுடன் வாழ வேண்டும். தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராய் மக்களாட்சிக் காவலராய் மன்பதை போற்றப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராக. **பேரறிஞர் அண்ணாவின்** வெற்றி மக்களாட்சியின் வெற்றியாகும். தமிழ்த்தாயின் வெற்றியாகும். வாழ்க அண்ணா! வெல்க மக்களாட்சி.

# குறள் அமுது

கவியரசு பொன். தினகரன்

**[4] இடுக்கண் வருங்கால் நகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். [621]**

பண்: பியாகு பாணி: இருசீர்

## எடுப்பு

இடுக்கண் வந்திடும் போது — சற்றும்நீ
இளக்க ரிக்கலாகாது — தம்பீ!

## தொடுப்பு

நடுக்கம் உற்றிடக் கூடாது — வையம்
நடுங்கு துயரே நேர்ந்த போதும்...

## முடிப்பு

1

மலையையும் தாங்கிடும் வன்மை — உன்றன்
மார்பிற் கிருப்பதில் இல்லை பெருமை
அலையென அல்லல் வந்தாலும் — நிலை
குலையா நிலையே வேண்டும் எக்காலும்

2

களம் பலவும் கண்ட காளை — சூழும்
கவலையால் உடல் மெலிந்தால் பெரும்கோழை
வளம் பெறும் வாழ்வு மேன் மேலும் —
இன்னல்
வரும் போது புன்னகை பூணு, எக்காலும்
— இடுக்கண்

# நீடுவாழ்க!

'முருகபாரதி'

அண்ணாவோ அண்ணாவென் றன்புடன்
தம்பிகள்
கண்ணாரக் கண்டு களிகூர்வார்—எண்ணாரை
என்சொல்வேன் அண்ணா இரும்புகழை
எந்நாளும்
முன்சொல்வேன் எண்ணம் முகிழ்த்து.

சுட்டும் விரலசைவில் சுற்றும் இதயங்கள்
எட்டும் இடமெங்கும் இன்புகழே-கொட்டும்
சுடர்ப்பேச்சில் தேன்றுளி சொட்டும்! விழிகள்
படர்வீச்சில் ஓடும்பகை பார்.

நூற்றுக்கு மேலே பலநூறு நோயின்றிக்
காற்றுக்கு மேலே கலைக்கதிராய்ப்-போற்றுங்
குடி
நற்றமிழர் நெஞ்ச நிலைக்களனாய் நீடுவாழ்க
சொற்றமிழர் அண்ணாத் துரை.

# மூன்றெழுத்து முதல்வர்

— தமிழ்நாடன்

அன்பு கனியும் அருள் வடிவம்
ஆற்றல் கொழிக்கும் எழில் உருவம்
இளைஞர் இதயம் ஈர்க்கும் இனிய திருவுரு
ஈடு இணையற்ற சொல்வல்லோன் சோர்வற்றோன்
உயர் குணக்குன்று! உத்தமர் காந்தியின் வழித்தோன்றல்
ஊக்கமுடையோன்! ஆக்கவழியில் செல்லும் அடலேறு
என்றுமுள தென்தமிழின் தூயகாவலன்
ஏற்றத்தாழ்வற்ற மன்பதை காணத் துடிக்கும் சீராளன்
ஐயமகற்றும் அறிஞன்! தெளிந்த நற் சிந்தனையாளன்
ஒண்டமிழ் உயரப்பாடுபடும் தண்டமிழ் தொண்டன்
ஓதுவான்! நாளும் தமிழ்மறை சீராக ஓதுவான்

ஔவியம் அற்றவன்! ஆடம்பரம் அகற்றிய தூயோன் யார்? இத்துணைச்சிறப்புக்கும் ஏற்ற பெருமகனார் யார்? அவர்தான் மூன்றெழுத்து முதல்வர். முத்தான மூன்று எழுத்துக்கள்; முத்தமிழ் வழங்கும் மாநிலம் முழங்கும் மூன்றெழுத்துக்கள்; இனித்திடும் இதயத்தோடு இளைஞர் போற்றிடும் மூன்றெழுத்துகள்; கனித்தமிழ் முழங்கும் ஞாலமெல்லாம் புகழ் விளக்கிடும் மூன்றெழுத்துக்கள்; தனித்தமிழ் ஓங்கி காலமெல்லாம் பாடுபடும் மூன்றெழுத்துக்கள் 'அண்ணா' என்ற அந்த மூன்றெழுத்துக்கள்;கத்துங்கடல்கடந்து கன்னித்தமிழ் முழங்கியது. அப்பப்பா அந்த மூன்று எழுத்துக்குத்தான் எத்தனை வல்லமை!

அண்ணா: திராவிட முன்னேற்றக்கழகக் காவலன்.

அண்ணா: ஐந்து லட்சம் தம்பிகளின் அருமை அண்ணன்;மற்றுமுள்ள தமிழர்களுக்கு அரசியல் வழிகாட்டி.

அண்ணா: "கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்" என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழும் சொல் வல்லோன்.

அண்ணா: தமிழக அரசியலில் புதிய விழிப்பை உயரிய நோக்காக உருவாக்கி வருபவர்.

அண்ணா பண்பாடுமிக்க அரசியல் களத்தைக் காணத் துடிப்பவர்.

அண்ணா மக்களாட்சி மாண்புணர்ந்த மதிநலம் மிக்க நல்லோர்.

அண்ணா மாற்றானையும் உளநோகச் செய்யாத நேரிய பண்பாளர்.

அண்ணா தமிழகப் பொதுமேடைகளில் நற்றமிழ் நடமிடச் செய்த நல்லோர்.

அண்ணா தமிழக மக்களைக் காசு நல்கி மாசற்ற தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்கச் செய்த பெரியோர். கட்டணம் கட்டிக் கன்னித்தமிழ் உரை கேட்கும் கனிந்த உள்ளங்களை உருவாக்கியவர்.

அண்ணா திரைப்படவுலகில் ஓர் ஏற்றமிக திருப்பத்தை ஏற்படுத்தியவர். அண்ணா என்னும் அழகுத் தமிழ்ச் செல்வன் மேடை ஏறினால் தென்றல் தவழும். தமிழ்த்தேனருவி ஒழுகும். தீந்தமிழ்க் கனிச்சாறு பொழியும். பொருளாதாரம் புள்ளி விபரத்தோடு இழியும். வரலாறு வாகான வருணனைகளோடு வழியும். இனிமை கொழிக்கும் அவரது உரை தமிழக மாந்தர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்.

"அச்சம் அவனை அடக்கியதில்லை!
ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை
அரண்மனை கண்டு அவன் சொக்கினதில்லை
மாளிகையின் மதுரவாழ்வு வேண்டினவனல்லன்
நிந்தனையை நிலாச்சோறு எனக்கொண்டவன்
வேதனையை வேண்டுமளவு உண்டவன்"

என்று அறிஞர் அண்ணா தம் 'எட்டு நாட்கள்' என்ற கட்டுரையில் இத்தாலி தந்த அறிவாளி ஃப்ருனோவைப்பற்றிக் கூறுகிறார். ஆனால் உண்மையில் மேற்கண்ட மொழிகள் அறிஞர் அண்ணாவுக்கு மிகப் பொருந்தும். சீர்மிகு செப்டம்பர் 15-ஆம் நாள் காஞ்சியில் நடுத்தரக் குடும்பத்தில்தோன்றியவர் அண்ணா. பெற்றோர் தேடித்தந்த பெருவாழ்வு அல்ல அவரது பொதுவாழ்வு. தம் தூய தொண்டால் அயராமுயற்சியால் முன்னுக்கு வந்தவர் முயற்சி திருவினை ஆக்கும் என்ற முதுமொழிக்கு ஒப்ப வளர்ந்து வருபவர். தமிழகத்தின் எதிர்காலம் அவரது கரங்களில் தவழத் துடித்துக் கொண்டிருக்கிறது.

**தமிழ் மொழிகாக்கச்சிறைபுகுந்தசெம்மலே வாழ்க!**
**தமிழ்வாழத் தமிழினம் வாழ உழைக்கும் அறிஞரே வாழ்க!!**

தமிழ்போல் நீடு வாழ்க!!!

குறள்நெறி ஆண்டுக்கட்டணம் உரூ. 6
,, இரண்டாண்டுக்கு ,, உரூ. 10

# குறள்நெறி

தமிழ்வாழ்க

திருவள்ளுவராண்டு 1996 ஆவணித்திங்கள் 30

15—9—65 மதுரை-6


பகையென்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற் பாற்றன்று.

## அயூப்கான் போர்வெறி அகற்றப்படல் வேண்டும்

அமைதியாக ஒத்துவாழ வேண்டிய இருநாடுகள் இன்று போர்க்களத்தில் மோதிக்கொண்டிருக்கின்றன. போரினால் ஏற்படும் அஞ்சத்தக்க விளைவுகளுக்கு மக்கள் ஆயத்தமாக்கப்படுகின்றார்கள். படிப்படியாக முன்னேறி வந்தமக்களினம் இன்று கீழிறங்கி விலங்கு நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. இவ்வல நிலைக்குப் பொறுப்பு அயூப்கான் தான்.

காசுமீரில் தம் படையினரை அனுப்பிக்கலகம் விளைக்க முயன்றார் அயூப். வியட்நாம் நிலைமை இங்கும் தோன்றுமென்றே அரசியலறிஞர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் காசுமீர் மக்கள் ஐந்தாம் படையினர்க்கு ஆளாகவில்லை. பாரதக் கூட்டரசு தக்க சமயத்தில் தக்கவாறு நடவடிக்கை எடுத்தது. ஊடுருவல் காரர்களாக வந்த அயூப்கான் படை துரத்தப்பட்டது. போர் நிறுத்தக் கோடுகளும் தேச தேச எல்லைகளும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. குருதி குடித்துச்சுவை கண்ட நரியைக் கூண்டில் அடைத்துப் பாலூட்டினாலும் அதற்குக் குருதி மேல்தான் வேட்கை செல்லும். அதுபோன்று படைத்தலைவராய் இருந்து போர்களை நடத்திக்கொண்டிருந்த அயூப்கான் நாட்டின் தலைவரானதும் மக்களாட்சி முறையை மறைத்து தனி ஒருவர் ஆட்சி முறையைக் கொணர்ந்து பரத கண்டத்தின் மீது படையெடுக்கவும் போர்வெறி கொண்டுவிட்டார்.

பாரதக்கூட்டரசின் தலைமையமைச்சர் பசுப்போல் சாதுவானவர் என்று பலரால் கருதப்பட்டாலும் இன்று புலிபோல் பாயத்தொடங்கிவிட்டார். படையெடுத்து வந்தோரை அவர் பதுங்குமிடம் வரையில் சென்று தாக்குவோம் என்று அஞ்சாது அறைகின்றார். அமைதியை நாடிப் பொறுத்துப் பொறுத்து பாரதம் பழியைத்தான் தேடிக்கொண்டது. ஆகவே நம்மீது படையெடுத்தோரை அவர் பணியும் வரையில் துரத்துவதுதான் ஏற்ற அரசியல் நெறியாகும். பாரதத் தலைமையமைச்சரைப் பாராட்டிப் பாரத மக்கள் அனைத்து வேற்றுமைகளையும் மறந்து அவர் பின் நிற்க வேண்டியதே முறையும் கடமையாகும். "சம்மு—காசுமீரின் நிலப்பகுதியிலிருந்து பாகிசுத்தானியர் ஒருவர் கூட இல்லாது செல்லுதல் வேண்டும். இந்தத்தவற்றை இனியும் செய்ய மாட்டோம் என்று உலக நாடுகள் ஒப்ப உறுதிமொழி கூற வேண்டும்" என



**உயர்திரு சாத்திரி** அவர்கள் துணிந்து கூறுவதை நாம் வரவேற்கின்றோம். அயூப்கான் தொல்லை, முறை சுரம் போல் மீண்டும் மீண்டும் ஏற்படாதிருக்கச் செய்வதுதான் தற்காப்புச் செயல்முறையின்போர்நிறுத்தத்துக்கு அடிப்படையாக ஆகவேண்டும்.

அயூப்கான் "காசுமீரில் மக்கள் வாக்குக் கணிப்பில் உரிமையளித்தலை ஏற்றுக்கொண்டால்தான் போரை நிறுத்துவேன்" என்று போர்முழக்

மாற்றார் படையைத் தோற்று ஓடச் செய்வோம்,

கம் செய்கின்றார். பாரதத்தின் உறுப்புநாடாக அமைந்துள்ள காசுமீர் பற்றிக் கூறுவதற்கு இவர்க்கென்ன உரிமை உண்டு? இவர் நாட்டில் மக்களாட்சித் தேர்தல் முறையையே குழி தோண்டிப் புதைத்து விட்டு வேற்று நாட்டுக்கு அம்முறை வேண்டும் என்பது எங்ஙனம் பொருந்தும். ஆகவே போகாத ஊருக்குள் நுழைந்து இல்லாத ஒன்றை அடைய முயலும் அறிவிலிபோல் போர் வெறியால் அயூப் நடக்கத் தொடங்கிவிட்டார். போர் வெறியர் நிலை அவர்க்கும் வரவேண்டியதுதான். அவர் பதவியைத்துறந்து புகலிடம் தேடவேண்டியது தான் மக்களாட்சிமுறையில் பாகிசுத்தான் ஆளப்படவேண்டும். அதற்குரிய செயல்முறைகளில்உலக வல்லரசுகள் நாட்டம் கொள்ளல் வேண்டும்.

உலக வல்லரசுகள் நடுநிலைமைப் போர்வையில், தாக்கியவரையும் தாக்கப்பட்டவரையும் சமமாகக் கருதுகின்றன. பாகிசுத்தானையும் பாரதத்தையும் சமநிலையில் வைத்து மதிக்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் இருதேசங்களுக்கும் உதவிகளை நிறுத்திக்கொண்டன இரு நாடுகளையும் நோக்கி "போரை நிறுத்துங்கள்; அமைதியை நிலைநாட்டுங்கள்" என வேண்டுகோள் விடுகின்றன. தாக்கும் நாடு எது! தாக்கப்படும் நாடு எது! எனக் காணத்தவறி விட்டன. வலிய சண்டைக்கு வந்த பாகிசுத்தானுக்கு ஆணவம் மிகுந்துவிட்டது. வந்த சண்டையை விடாத பாரதம் தொல்லைப்படுகின்றது.

இருநாடுகளும் போர் விளம்பரம் செய்யவில்லைதான்.ஆயினும்அயூப், 'போர்தொடங்கிவிட்டது பெரும் அளவில் நடக்கின்றது' என்று கூறிவிட்டார். அயூப்கான் படைகள் கோயில்கள் மீதும், மருத்துவ நிலையத்தின் மீதும் பொது மக்கள் மீதும் குண்டுகள் வீசுகின்றன. இந்த இருபதாம் நூற்றுண்டில் இத்தகைய போர் ஒன்று நடப்பதே மனித குலத்திற்கு மிக மிக இழிவாகும்; அயூப்கான் அறிவு தெளியப்பெற்று அமைதியாகத் தீர்வு காண முன்வரவேண்டும். இன்றேல் அவர் பதவியினின்று அகற்றப்படவேணடும். நல்லாட்சி அங்கு நிலவும் வரை பாரதம் போரிட வேண்யதுதான். போரிடும் கூட்டரசுக்கு மக்கள் எல்லா வகையினும் ஒத்துழைப்பு நல்க வேண்டியதுதான், உலக மன்றப் பொதுச் செயலாளர் உயர்திரு. ஊத்தாண்டு தாம் மேற்கொண்டுள்ள அமைதிப் பணியில் வெற்றி பெறுவாராக.

பகைமை ஒழிய வேண்டும்; போர் ஒடுங்குதல் வேண்டும்; இருநாடுகட்கும் புகழ் ஓங்க வேண்டும்.

பாரதமும் பாகிசுத்தானும் கூடிவாழும் சூழ்நிலை விரைவில் தோன்றுதல் வேண்டும்.

# வருந்துகின்றோம்; வணங்குகின்றோம்.

"சமயப்பெரியார்களனைவரும் வாழ்வு துன்பத்திற்குரியது; வெறுக்கப்படவேண்டியது என்றனர். ஆனல் திருவள்ளுவர் மட்டும் தான் வாழ்வு இன்பத்திற்குரியது; வாழ்ந்து மகிழவேண்டியது; விரும்பத்தக்கது என்று கூறிப்போந்தார்" என உலகறிய உரைத்த மன்னுயிர் போற்றிய மக்கள் தொண்டர் **ஆல்பர்ட்டு சுவைட்சர்** தமது தொண்ணூருவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார் என்ற துயரச் செய்தி எம்மைப் பெருந்துன்பத்தி லாழ்த்தி விட்டது. ஆப்பிரிக்காக்காட்டில் நாகரிகமடையாத மக்களிடையே தொழு நோயாளர்கட்கும் பிற கொடு நோயாளர்கட்கும் தொண்டு செய்வதிலேயே இன்பம் கண்ட பெரியார் என்றும் நம்மால் தொழத்தக்கவர்; அவர் போன்றார் இன்னொருவரை இனியும் காண்டலரிது. அவர் பிரிவால் பெரிதும் வருந்துகின்றோம்; அவர்க்கு எம் வணக்கத்தை அறிவிக்கின்றோம். அருள்நெறித் தொண்டில் இன்பம் கண்ட அவர் புகழ் என்றும் நின்று நிலவுவதாக.

# பேரறிஞர் அண்ணா வாழ்க!

இந்தி முதன்மையினின்று ஏனைய மொழிகள் காக்கப்படவேண்டும்; பதினெட்டு ஆண்டு காலமாக நாட்டை ஆண்டுவரும் ஒரு கட்சியாட்சியிலிருந்து நாடு காக்கப்படவேண்டும்; தமிழ்மொழி தனக்குரிய உரிமையை எய்துதல் வேண்டும், தமிழ்நாட்டில் மக்களாட்சி முறை

செழித்தோங்க வேண்டும்.

இன்று ஆளும் காங்கிரசுக்கட்சிக்கு எதிர்க்கட்சியாகத் தமிழ் நாட்டில் வீறுபெற்று விளங்குவது **திராவிட முன்னேற்றக் கழகம்** தான். அதன் ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணாத்துரை. அவர் தலைமையில் அவர் கட்சி ஆளும் கட்சியாக வந்தால் தமிழ்மொழி ஏற்றம் பெறும்; மக்களாட்சி முறை வெற்றி பெறும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பேரறிஞர்க்கு ஐம்பத்தேழாண்டு நிறைவு பெறும் இந்நாளில் அவரை வாழ்க; பல்லாண்டு வாழ்க என உளமார வாழ்த்துகின்றோம்.

## நினைவுக் குறிப்பு.



**டாக்டர் திருவேங்கடம்:** சென்ற ஆண்டு ஆவணித்திங்கள் 22-ஆம் நாளில் எம்மை விட்டுப் பிரிந்த எம் அன்புக்குரியவர் என்றும் எம் உளங்களில் குடிகொண்டுள்ளார்.

— மக்களும், மருமக்களும்.

அடுத்த இதழிலிருந்து

டாக்டர் சி. இலக்குவனார் எழுதும்

## "செந்தமிழ்க்காப்பு தந்த சிறைவாழ்வு"

என்ற தொடர்கட்டுரை வெளிவரும்.

★

உங்கள் இதழ்களுக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

## விற்பனையாளர்கட்கு வேண்டுகோள்

அன்பார்ந்த விற்பனையாளர்களே!

வணக்கம். "குறள்நெறி" நாளும் நாளும் சிறந்து வளர்ந்து பெருகுவது உங்கள் உதவியையே சார்ந்துளது. ஒவ்வொரு மாதமுடிவிலும் அனுப்பவேண்டிய தொகையைத் தவறாது அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். பல கடிதங்கள் எழுதியும் பொருட்படுத்தாமல் சிலர் உள்ளனர். இனியும் அவ்விதம் இராது பட்டியல்கிடைத்தவுடன் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். அனுப்பாவிடின் இதழ் அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## உறுப்பினர்கட்கு வேண்டுகோள்

பண்பார்ந்த நண்பர்களே, வணக்கம்.

உறுப்பினராகிக் 'குறள்நெறி'த் தொண்டில் ஈடுபட்டுள்ளமைக்கு எம் உளமார்ந்த நன்றி. உறுப்பினர் கட்டணக் கால எல்லை முடிந்தவுடன் எமது நினைவுக் குறிப்பின்றியே மறு ஆண்டுக்கும் உறுப்பினர் கட்டணம் செலுத்திவருமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு உறுப்பினரும் தத்தமக்கு அறிமுகமான நண்பர்களை உறுப்பினராக்க முயலுமாறு உரிமையோடு வேண்டுகின்றோம். இரண்டாண்டுகட்குப் பத்து ரூபாய் என்று வைத்திருப்பதனால் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி இரண்டாண்டுக்கட்டணமே செலுத்தி உறுப்பினராகவும் வேண்டுகின்றோம்

[10-ஆம் பக்கத்தொடர்ச்சி]

மற்ற எல்லா வசதியும் இருக்குங்க, என்று தனக்கே உரியநடையில் பேசினாள். பேச்சிலிருந்த குழைவு அவருடைய உள்ளத்தை மென்மையாக்கியது. தளர்ந்த வயதிலும் தன்னுடைய நிலைமாறாது தனித்தமர்ந்தாள் தன்னுடைய கதையை விளம்பினாள்...ஓய்வுக்காக அவரும் அவளுடைய பேச்சைக் கேட்க ஆரம்பித்தார். 'எனக்கு ஒரு மகனுங்கோ! அவனைப் பள்ளிக்கூடத்கு அனுப்பி வச்சனுங்கோ! நல்லாப்படிக்கிறான்னு எல்லாரும் சொன்னாங்க நானும் ஐயா! வீட்டிலே கிடைக்கிற வருமானத்தைக்கொண்டு படிக்க வச்சனுங்கோ.

"ஒரு நாள்!" அந்த ஒரு நாளை நினைச்சா என் உள்ளம் நோகுதுங்க, என்று வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்தாள். எல்லாம் அவனுக்காகத்தான் உழைக்கிறேனுங்கோ நம்ம ஐயா வீட்டுக்கு வராம இருக்க மாட்டானுங்க. ஐயாவும் வேணுங்கிற உதவி செய்வாருங்க. ஊரு மூலையிலே முத்துச்சாமி என்கிற ஒருத்தர் இருந்தாருங்கோ. அவளுடைய மக "குலுங்கா" வை இவன் காதலித்தான்னு சொல்லி அவனைக் கட்டி வைத்து அடித்த அடி இன்னிக்கு நினைத்தாலும் சோறு போவாதுங்க. அதுமட்டுமல்லிங்க கட்டியிருந்த துணியெல்லாம் பிடுங்கி அவமானம் பண்ணிட்டாருங்க. நல்லா இருந்தவன்னு பேர் எடுத்தவனுங்க. ஊர் மக்களெல்லாம் பரிதாபப்பட்டாங்க.

'அடிச்சதுமில்லாமே! இப்படி அவமானம் செயலாங்களா ஐயா' என்ன செய்யறது. காலமே இப்படிதானே இருக்கிறது. கேளுங்க ஐயா, பிறகு அவனைக் கூட்டி நியாயம் பேசினாங்க ஊர்மக்கள், பெண்ணுடை தகப்பன் நம்ம ஐயா எல்லாம் பேசினாங்க. ஊர்மக்கள் உன்னுடைய மகள் ஏனய்யா அவனைக் காதலித்தாள். பேசாமல் உன்னுடைய மகளை அவனுக்கே ஒப்படைத்துவிட வேண்டியதுதான். என்றனர் ஊர்மக்கள். முத்துசாமி "அதெல்லாம் முடியாது என் மகளை அவன் எப்படி! காதலிக்கலாம். காதலித்ததுக்கு குத்தம் போடும்னு" வழக்காடினான் நம்ம ஐயா! குறுக்கிட்டு, யாரும் ஒன்னும் பேசவேணும். இரண்டு பேருடைய விருப்பத்தையும் சம்மதத்தையும் அறிந்து ஆகவேண்டியதைப் பார்ப்போம் என்றார். ஊர் மக்களும் ஒத்துக்கொண்டனர். இருவருக்கும் அந்த மங்களம்மன் மன்றத்துலேதான் நடந்ததுங்க.

இரண்டு நல்லாத்தான் இருக்குதுங்க அவளுடைய மகன் வேழன் வந்தான். வந்ததும் சிவஒளி ஐயாவுக்கு வணக்கம் செலுத்தினான். சிவஒளி புன்முறுவல் செய்தார். இவன்தான் என் மகனுங்களன்றுவளவனிடம்சொல்லிவிட்டு ஐயாக்கிட்டோ பொத்தகமெல்லாம் வாங்கிப் படிப்பானுங்க என்றாள்.

ஏ! வேழா! எங்கேடா! அந்தக் **'குடும்ப விளக்கு'** பாதிப் படித்துனுங்க. இன்னும் பாதி இருக்குதுங்க. இவரு யாருங்கய்யா! நம் வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளி வேழன் அம்மா! நல்லா கவனிச்சுவாங்களே! அந்தப் பொத்தகம் இருக்குது பார்! அது பக்கத்து வீட்டுப் பச்சமுத்துக்கோனாருடையது. அவருடைய நூல் நிலையத்திலிருந்து எடுத்து வந்தாராம். கேட்டாரு; சீக்கிரம் கொடுத்துடும்னு சொன்னார் என்னார்.

அடிக்கடி தன்னுடைய தாய் சுருக்குப் பையை அவிழ்த்துச் சுருக்கும்போது தன்னுடைய உள்ளமும் சுருங்கி விரிவதாக உணர்வான். வேழனும் வந்த விருந்தாளியிடம் என்னுடைய 'வாழ்க்கை விளக்கை' ஏற்றி வைத்தவா நம்ம ஐயாதானுங்க. ஏற்றி வைத்த விளக்குக்கு இதுவரை ஒன்னும் குறைவில்லீங்க, என்று குழைந்து பேசினான். 'நம்ம அம்மாவோ! உத்தமிங்க! எந்த ஒரு பொருள் செய்தாலும் கொடுத்துட்டுதான் சாப்பிடுவாங்க எங்க தாய் இந்த குடும்பத்துலே கொண்ட அன்பு இவ்வளவுன்னு சொல்லி முடியாதுங்க. இங்கதான் இருப்பாங்க. எங்காயி!' என்றான். விருந்தாளியும் விடைபெற்றார்.

காலச்சகடம் சுழன்றது! தன்னுடையக் கோயிலாக நடமாடிக்கொண்டிருந்த பரமாயி, உடல் நலங்குன்றி ஒட்டிய உடலோடு போராடிக்கொண்டிருந்தாள். எமன் அதையும் கவனிக்காது பற்றிக்கொண்டான். இதுவரை அவன் காணாத, இந்த அனுபவம் துக்கக்கடலில் ஆழ்த்தியது. அதுமட்டுமல்ல, துயரமே! வடிவான தனது துணைவியின் நிலைமை ஒருபக்கம், இதையெல்லாம் சந்தித்தபோது 'சன்மார்க்க சீலர்' சிவ ஒளி ஒருவர் இல்லாவிட்டால், எப்பவோ 'தற்கொலை' செய்துகொண்டிருப்பான்.

தண்ணளி செய்யும் தாளாளர் சிவஒளி 'பயப்படாதே! வேழா! நானிருக்கும்வரை, மகனை எண்ணிக்கொள்வேன். எனக்கு மகவில்லாக்குறையை உன்னாலேயே மறந்தேன். 'இனிமேல் மட்டுமென்ன!' என்று சொல்லியபோது தன்தாயின் அன்பு நிறைந்த 'குடும்பக் காதலை' எண்ணிக்கண்ணீர்! மல்கினான். அன்னாருடைய, 'குடும்ப விளக்கை' தன்னுடைய இரு கைகளாலும் தொழுது கொடுத்தான். அவரும் தன்னுடைய ஆராக் காதலுக்கு அறிகுறியாக, இரண்டு சொட்டுக் கண்ணீரோடு அதைப் பெற்றார். இதுவரை எந்த நிகழ்ச்சியும் தாக்காத அவருள்ளத்தை தாக்கியசமயம் மழையும் துளித்துக்கொண்டிருந்தது. மக்களும் அங்கும் இங்குமாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

---

**தமிழ்க்கடிதத்தில் ஆங்கிலக்கையெழுத்து எற்றுக்கு?**

# தொல்காப்பிய விளக்கம்

டாக்டர் சி. இலக்குவனார்

232. மாமரக்கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப்பெயரும் அவற்றோரன்ன;
அகரம்வல்லெழுத்து அவை அவண்நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்.

மாமரக்கிளவியும்–மாமரமாகியசொல்லும் ஆவும்='ஆ' என்னும் சொல்லும், மாவும்= 'மா' என்னும் சொல்லும், (ஆகிய), ஆமுப் பெயரும்= அம்மூன்று பெயர்ச்சொற்களும், அவற்றோரன்ன=மேற்கூறப்பட்ட 'யா' முத லிய மூன்றனோடும் ஒரு தன்மையவாய் வல் லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுமுடைய; ஆவும் மாவும்=அவற்றுள் 'ஆ'வும் 'மா'வும், அகரம் வல்லெழுத்து=அக ரமும் வல்லெழுத்துமாகிய, அவை அவண்= அவைகள் அவ்விடத்து, நிலையா=நிலைபெறா; னகரம் ஒற்றும்='ன்' மெய்யாக வரும்.

காட்டு: மா+கோடு=மாஅங்கோடு
ஆ+கோடு=ஆன்கோடு
மா+கோடு=மான்கோடு.

'மா' என்னும் சொல் மரத்தையும், விலங் கையும், குறிக்கும். ஆதலின், மரத்தைக்குறிக் கும் 'மா' வை 'மாமரக்கிளவி' எனப்பிரித்து ஓதினர். அது 'ன்'பெறாது.விலங்கைக்குறிக்கும் 'மா'தான் 'ன்' பெறும்.

233. ஆன் ஒற்று அகரமொடு நிலையிடன்
உடைத்தே

ஆன் ஒற்று = 'ஆன்' என்னும் சொல்லினது னகர ஒற்று, அகரமொடு= அகரத்தோடு, நிலையிடன் உடைத்து=நிற்கும் இடத்தை உடையது.

காட்டு: ஆன்+நெய்=ஆனநெய்.

234. ஆன்முன் வருஉம் ஈகார பகரம்
தான் மிகத்தோன்றிக் குறுகலும் உரித்தே.

ஆன்முன் வருவும்='ஆன்' என்னும்சொல் முன்னர் வருகின்ற, ஈகார பகரம்='பீ', தான் மிகத்தோன்றி='ப்' எனும் தனது மெய்மிகு மாறு தோன்றி, குறுகலும் உரித்தே=ஈகாரம இகரமாகக் குறுகலும் உரியது.

காட்டு: ஆன்+பீ= ஆப்பி (சாணம்)

235. குறியதன் இறுதிச்சினை கெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே.

குறியதன் இறுதி+குறியதன் இறுதிக் கண் நின்ற, சினைகெட = ஆகாரத்தினது சினையாகிய அகர மாத்திரை கெட, உகரம்= ஆண்டு உகரம், அறிய வருதல்=யாவரும் தெரிய வருதல், செய்யுளுள் உரித்து=செய் யுளிடத்து உரியது.

காட்டு: இரா > இரவு.
நிலா > நிலவு.

236. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே.

இகர இறுதிப்பெயர் நிலைமுன்னர் = இகர ஈற்றுப்பெயர்ச்சொல்லின் முன். (க, ச, த, ப எனும் வல்லெழுத்துக்களை முதலில் கொண்ட சொற்கள் வந்தால்) வேற்றுமையின் =வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாக இருந் தால், வல்லெழுத்துமிகுமே=வந்த வல்லெழுத் துக்களே மிகும்.

காட்டு: கோழி+கால்=கோழிக்கால்.

237. இனி அணி என்னும் காலையும் இடனும்
வினை எஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன.

இனி அணி என்னும்='இனி' என்னும் 'அணி' என்றும் சொல்லப்படுகின்ற, காலையும் இடனும் = காலத்தையும் இடத்தையும் உணர்த்துகின்ற இடைச்சொற்களும், வினை யெஞ்சு கிளவியும்=வினையெச்சமாகிய இகர வீற்றுச் சொற்களும், சுட்டும் அன்ன=இகரச் சுட்டும் மேற்கூறியவாறு வல்லெழுத்து மிக்கு முடியும்.

காட்டு: இனி+கொள்வான் = இனிக்
கொள்வான்
அணி+சென்றான் = அணிச்சென்றான்
தேடி+கொண்டான் = தேடிக்
கொண்டான்
இ+கொற்றன் = இக்கொற்றன்.

238. இன்றி என்னும் வினை எஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள்
உரித்தே.

'இன்றி' என்னும் = 'இன்றி' என்று சொல்லப்படும், வினை எஞ்சு இறுதி நின்ற = வினை எச்சத்து இறுதிக்கண் நின்ற, இகரம் உகரமாதல் = 'இ', 'உ'வாக மாறுதல், தொன்றியல் மருங்கின் = பழைமையாக வழங்கிவரும் முறைப்படி, செய்யுளில் உரித்தே = செய்யுட்களில் உரியது.

சாட்டு: உப்பு + இன்றி + புற்கை உண்க =
உப்பின்று புற்கை உண்க.

'இன்றி' என்பது 'இன்று' என மாற்றம் உறுவதற்குக் காரணம் முன்பின் வந்துள்ள உகரங்களே என்பர் மொழி நூலார். முன்னும் பின்னும் வந்துள்ள உகரத்தை ஒலிக்குமாறு இடையில் வந்துள்ள இகரத்தையும் உகரமாக ஒலித்துவிட்டது. ஒலிநயம் குறித்து உயிர் ஒரினப்படுதல் (Harmonic Sequence of Vowels) என மொழி நூலறிஞர் கால்டுவெல் இதனை அழைத்துள்ளார். இவ்வகை மாற்றம் இந்திய மொழிக்குழு மொழிகள் அனைத்திலும் காணப்படும் என்பர். 'இன்றி', 'இன்று' எனும் சொற்களுள் 'இன்றி'யே தொன்மையானது என அறியக்கிடக்கின்றது.

239. சுட்டின் இயற்கை முற்கிளந்தற்றே.

சுட்டின் இயற்கை = இகரச்சுட்டினது இயல்பு, முன்கிளந்தற்றே = முன் அகரச்சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்தாம்.

மெல்லின எழுத்துக்கள் வரும்பொழுது அவ்வெழுத்துக்கள் மிகும். இடையின எழுத்துகளும் உயிர் எழுத்துக்களும் வரும்பொழுது இடையில் வகரம் வரும்.

காட்டு: இ + நூல் = இந்நூல்
இ + யாழ் = இவ்யாழ்
இ + ஆடை = இவ்வாடை

240. பதக்கு முனவரினே தூணிக்கிளவி
முதற்கிளந்தெடுத்த வேற்றுமை யியற்றே.

தூணிக்கிளவி = 'தூணி' என்னும் சொல், பதக்குமுன் வரினே = 'பதக்கு' என்னும் சொல் முன்வரின், முதல்கிளந்து எடுத்த = முன்பு விதந்து கூறப்பட்ட, வேற்றுமை இயற்றே = வேற்றுமை முடிபின் இயல்பினதாகும்.

காட்டு: தூணி + பதக்கு = தூணிப்பதக்கு

தூணி, பதக்கு என்பன முகத்தல் அளவைப்பெயர்கள்.

தூணி = நான்கு மரக்கால் கொண்டது.
பதக்கு = இரண்டு மரக்கால்கொண்டது.

'தூணிப்பதக்கு' என்பது 'தூணியும் பதக்கும்' என அல்வழி உம்மைத் தொடராகும். ஆயினும் வேற்றுமை முடிபு கொண்டுள்ளது.

241. உரிவருகாலை நாழிக்கிளவி
இறுதி இகரம் மெய்யொடும் கெடுமே;
டகாரம் ஒற்றும் ஆவயினான.

நாழிக்கிளவி = 'நாழி' என்னும் சொல், உரிவருகாலை = 'உரி' என்னும் சொல் தனக்கு அடுத்துப்பின் வரும் பொழுது, இறுதி இகரம் = 'நாழி' என்பதன் கடைசியில் உள்ள இகரம், மெய்யொடும் கெடும் = தான் ஊர்ந்துள்ள மெய்யெழுத்தோடும் மறையும்; ஆவயினான = அவ்விடத்தில், டகாரம் ஒற்றும் = 'ட்' என்னும் மெய் தோன்றும்.

காட்டு: நாழி + உரி = நா + உரி >
நாட் + உரி > நாடுரி.

நாழி = ஒரு படி.
உரி = இரண்டுபடி.

242. பனியென வருஉம் காலவேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை யாகும்.

பனியென வருஉம் = 'பனி' என்று சொல்ல வருகின்ற, காலவேற்றுமைக்கு = காலவேறுபாட்டை உணர்த்தும் சொல்லுக்கு, (பனிக் காலத்தை அறிவிக்கும் வேற்றுமை முடிபை உடைய பெயர்க்கு), அத்தும் இன்னும் = 'அத்து' 'இன்' என்பன சாரியை ஆகும் = சாரியைகளாகவரும்.

காட்டு: பனி + கொண்டான் — பனியத்துக்
கொண்டான்.
— பனியிற்
கொண்டான்.

'பனியத்துக்கொண்டான்' என்னும் வழக்கு மலையாள நாட்டில் இன்றும் உளது. இன்று மலையாள நாடு எனப்படும் பகுதி தொல்காப்பியர்காலத்தில் தமிழ் நாடாகவே இருந்தது.

# நின்றுவாழ்க!

தென்கச்சி சி. கலியபெருமாள் கூத்தூர்.

[அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா]

தொல்குடி மரபினராம் தூயதமிழ் நாடுடையார்
சொல்தொகுதி தனைச்சேர்த்து தொல்காப்பியம் விரித்துரைத்த
**பல்புகழ்சேர் பாவாணர் பைந்தமிழ் இலக்குவனர்;**
இடமகன்ற எழில்மதுரை நகர்தங்கி, எழுச்சிகொண்டு
சுடரறிவு தனைக்கொளுத்தி சுந்தரத் தமிழ்வாழ
கடலெனவே ஆர்ப்பரித்த கனிதமிழ்ப் பெருந்தகையோய்!

**இது தரவு.**

முரசமெலாம் தமிழ்கொட்டி முழக்கமிடும் மக்கள்தமை
சிரசுகொய்யும் இந்திக்கு சவுக்கேந்தும் மறமல்லன்,
முடியிற்று முண்டம் வேருய் நிலந்தோய்ந்து
படிந்தாலும் தமிழ்காப்பேன் என்றதுநின் தோளன்றோ!
தாயின் மொழியினிலே தமிழகத்து ஆட்சியினை
சேயெல்லாம் பெறுவண்ணம் செய்வதற்கே தாளெடுத்து
கூடுமிடம் வீடெல்லாம் கொள்கைதனைப் பரப்பி, நல்
ஏடெல்லாம் எழுதியது எந்தமிழ!நின் எழுத்தன்றோ!
நிறைபுலமை பெற்றவர்கள் தலைமச்சேர்த்து, மக்களாட்சி
குறையுடைத்த மொழிக்கொள்கை எனவுரைத்து குலம்வாழ
தருமதுரை நகரிருந்து தலைமை நோக்கி
பெருவழிப் பயணமதைக் கொண்டதுநின் நடையன்றோ!

**இவை மூன்றும் தாழிசை.**

தண்டமிழ்ச் சொத்தாய் தென்பண்டி முத்தாய்
கொண்டலின் பொழிவாய் நின்றது நுஞ்சொல்,
மாரியின் அருளும் பாரியின் கொடையும்,
கூரிய பார்வையும் கொண்டது நின்முகம்!

**இவை நாற்சீரடி இரண்டம் போதரங்கம்.**

தண்மதி ஒளிரும் தவத்திரு முகத்தினை;
தண்டமிழ் விளக்கி தழைத்திடும் மொழியினை;
குவலயம் சுற்றும் "குறள்நெறி" தாளினை;
உவமையிலாத் தமிழாம் ஒரு பெரு மொழியினை;

**இவை நாற்சீரோரடி நான்கம் போதரங்கம்.**

தொல்காப்பியம் கண் டோன் நீ;
துயர்ச்சிறையில் இருப்போன் நீ;
பல்கலையைப் பார்த்தோன் நீ;
பைந்தமிழின் மூத்தோன் நீ:

**இவை முச்சீரோரடி நான்கம் போதரங்கம்.**

| | |
|---|---|
| ஊன் நீ | உருவு நீ; |
| உலகு நீ | அருவு நீ; |
| ஆண்மை நீ; | அறமு நீ; |
| அருளு நீ | மறமு நீ; |

**இவை இருசீரோரடி எட்டம் போதரங்கம்.**

எனவாங்கு,

**இது தனிச்சொல்.**

நந்தமிழ் நலந்தனை நாடிடும் புகழோன்
செந்தமிழ் சந்தனம் பூசிடும் மார்பில்
ஆண்டநந் தமிழை ஆண்டவன் கோயிலாக்கி,
பாண்டியன் நாட்டில் படைத்திடும் அர்ச்சகன்
பொன்றுப் பெரும்புகழ் சேர
நின்றுவாழ்க! நெடும்புவி தனிலே!

**இது ஆசிரியச் சரிதகம்.**

[6-ஆம் பக்கத்தொடர்ச்சி] கனவென்று..........

நிற்கின்றது; கொன்றையும் பூத்துக் குலுங்குகின்றது. எனக்கூறிக் கண்ணீர் வடித்தாள் தலைவி.

"இல்லை—இது கார்ப்பருவம் அல்ல; காராயின் உன் இளமை நலமுண்ண அவர் வந்திருப்பார்; உயர்குடிப் பிறந்த உத்தமர் வழிவந்தவர் அவர்; பொய் சொல்லார்; சான்றோர் பழிக்கும் வினை செய்யார்; ஊழி பெயரினும் தாம் பெயரார்; குவளையொடு பொதிந்து குளவிநாறும் நின் நறியநுதலை ஒரு கணமும் மறவார். இன்னுஞ் சிறிது பொறுத்திரு: அணிநெடுந்தேர் மணியொலிக்க வந்திடுவார். உன்னை அள்ளியணைத்திடுவார்" எனச்சொல்லிச் சிரித்தாள் தோழி.

இல்லையடி பேதை. கார்காலந்தானிது. உனக்குத் தெரியவில்லையா! அதோ, நீயே பார். 'செல்வச்சிறார் சீறடிப் பொலிந்த கிண்கிணிப் பொற்காசு' போலப் பூத்துளது கொன்றை. வெருகு (வெருகு—பூனை) சிரித்தன்ன மலர்ந்துளது முல்லை. இவை, மணம் வீசி என்னைத்தான் மயங்க வைக்கின்றன; மாலை மலரும் நோயை மிகுவிக்கின்றன என்றால் உனக்கேன் மயக்கம்? இல்லையென்றால் யான் காண்பது கனவென்று நினைக்கின்றாய்? நான்தான் கேட்கின்றேன். பதில் சொல் பார்ப்போம் என்றாள் தலைவி.

இதோ! இத்தலைவியின் கூற்றைத்தம் சொல்லால் வடித்துக்காட்டுகிறார்—

இளங்கீரந்தையார் என்னும் நம் குறுந்தொகைப்புலவர்.

செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போது ஈன் கொன்றை
குருந்தொடு அலம் வரும் பெருந்தண் காலையும்
கார் அன்று என்றி ஆயின்
கனவோ மற்று இது? வினவுவல்யானே

[குறுந்தொகை 214]

## இளந்தமிழர் எண்ணிலரே!

மூவரசர் மடியினிலே முறுவல் புரிந்தவளே
நாவரசர் மனதினிலே நற்கோயில் கொண்டவளே
தென்றலொடு திங்களைத் தீஞ்சுவையைச் சுமந்தவளே
அன்றிலொன்று வாடியழும் அவலஒலி கேட்டிலையோ
நக்கீர னும்மகனை நாடிழந்த தென்றிருந்தோம்
இக்கால மீதிலவன் (இ)லக்குவனை வந்துதித்தான்
இந்தியெனும் மந்திமொழி இன்தமிழை ஆளுவதா
செந்தமிழன் நிந்தனையால் சந்தியிலே வாழுவதா
என்றவனும் எழுந்திட்டான் ஏறினைப்போல் அம்மம்மா!
இன்றவனின் பின்செல்லும் இளந்தமிழர் எண்ணிலரே!

— சுப்பய்யா பாரதி

## சிதைப்பீர் பகையை

செய்குன் றன்ன செழுந்தமிழ் உளத்தர்
உய்வகை காட்டும் உயர்தமிழ் மன்னர்
மறைமலை அடிகள் மறைந்தபின் தமிழ்வளம்
உறைமலை என்று ஒப்பினர் தமிழர்
செந்தமிழ் காக்கச் சிறைவாழ் வேற்ற
என்றன் தலைவர்! இந்நாள் வள்ளுவர்!!
சிறுபதம் இன்றிச் சிற்றுயிர் விட்டான்
இரும்பொறை என்னும் எழிற்றமிழ் ஏந்தல்!
இரும்பொறை பரம்பரை இணையிலா இலக்குவர்
கரும்புத் தமிழைக் காட்டிக் கொடுக்கும்
மானம் இலாத்தமிழ் ஆசிரி யமக்காள்!
ஈனப் பதவி இன்றிரும் நாளைபோம்
பதவியைத் துறமின்! பைந்தமிழ் காமின்!
சிதைப்பீர் பகையைச் செந்தமிழ் காத்தே!

— ப. காளிமுத்து

வரப்பெற்றோம்

1. **"தமிழ்த்தேன்"** திங்கள் வெளியீடு
ஆசிரியர் பா. வளன் அரசு, எம். ஏ.
வெளியீடு: தனித்தமிழ் இலக்கியக் கழகம் பாளையங்கோட்டை.

2. **அகத்தியர் ஞானம்-30**
எசு. டி. இரத்தினம், புகைவண்டி நிலையம் அருகில், கீழ ஆம்பூர்.

# மலர்ந்த வாழ்வு

தொடர் கதை

இரா. இளங்குமரன்.

மணவாளன் *(தொடர்ச்சி)*

'திருடுதல்போலத் திருத்தொழில் எதுவும் இல்லை' என்று என் இதயம் அன்று சொல்லிக் கொண்டு இருந்தது. இன்றோ, திருடியவன், தெருவழிப்போகலாமா? என்று இதயம் இடிக்கின்றது. முன்னெல்லாம் இருண்டுகிடந்த என் கண்களுக்கு மற்றவர்கள் நோக்கம் எப்படி விழுகிறது என்பதை எண்ணமுடியவில்லை. தன்னுணர்வு வந்துள்ள இவ்வேளையில் என்னைப்பற்றி அடுத்தவர்கள் எப்படியெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்னும் ஏக்கமே எழுகின்றது. இதே ஊரில் இன்னும் உலாவித்திரிய வெட்கம் உண்டாகின்றது. இத்தன்மை முன்னமே ஏற்பட்டிருந்தால் தீய திருட்டில் இறங்கி இருப்பேனா?

'நான் செய்த தவற்றைப் பொறுக்க வேண்டும்' என்று கருங்குழல் காலடியில் கைவைத்தேனே! அப்பொழுது அவள் எவ்வளவு விரைவாகக் காலை இழுத்து எடுத்துக் கொண்டாள்? பொறுக்கமறுக்கிறாளா என்னும் மயக்கம்கூட எனக்கு உண்டாயதே! ஆனால், நடந்ததென்ன? அவள் சொல்லிய சொல்லை அமுதமொழி என்பேனா? அருள் மழை என்பேனா? அறக்கடவுளின் உரை என்பேனா?

அண்ணா! புரிந்து கொண்டேன். நீங்கள் சிலபல சூழல்களால் திருடராகிவிட்டது உண்மையே. இவற்றை எப்படி நான் உண்மை என நம்புகிறேனோ இதுபோல் இன்னொன்றையும் நம்பியேயாகவேண்டியது இருக்கிறது. நீங்கள் திருந்தியதும் உண்மைதானே.

''தவறே செய்தவர் எவர்? தவறு செய்கிறார்கள்; செய்தபின்னராவது தவற்றை உள்ளபடி உணரவேண்டும் அல்லவா! உணர்ந்தால் மட்டும் போதுமா? தங்கள் வாழ்வில் மீண்டும் அத்தவறு வந்து சேர்ந்துவிடா வண்ணம் பார்த்துக்கொள்ளவும் வேண்டும் அல்லவா! இப்பொழுது நீங்கள் வடிக்கும் கண்ணீர் நீங்கள்செய்த பிழைகளையெல்லாம் கழுவிக்கொண்டு ஓடுகின்றது. இது நல்ல அறிகுறி! இதனைப் பாராட்ட வேண்டுவதே பண்புடையவர் – பகுத்தறிந்தவர் – கடமை! இதனை இன்னும் பழிக்கத் துணிந்தால் அவர் பாவியேயாவர்!.

'ஊர்வழி நடந்து திரியவா' என்கிறீர்கள். ஊரார் அனைவரும் தவறே செய்தறியாதவர்களா? அவரவர் நெஞ்சில் கைவைத்துப் பார்த்துச்சொல்லட்டும். பிறரைப் பழிக்கத்தொடங்கு முன் இதயத்தை ஒருமுறை தொட்டுப் பார்த்துச் சொல்லட்டும். எத்துணைபேர்களின் வாய் ஒடுங்கிவிடும்! ஓய்ந்துவிடும்!

'உங்களுடன் திருடித்திரிந்தவர்கள் எங்கே போய்விட்டார்கள்? இந்த ஊரில்தானே உலாவித்திரிகிறார்கள், அவர்கள் தங்களைத் தீயவர் என்று எண்ணிக்மொண்டா நடைபோடுகின்றனர்? எவ்வளவு தூயவர்களாகத் தங்களை எண்ணிக்கொண்டு பீடுநடை போடுகின்றனர். நீங்கள் அவர்களினும் பன்னூறுமடங்கு பண்பட்டவர்கள் அல்லவா! தவறு என்பதை எண்ணத் தொடங்கிவிட்டீர்கள். கரைந்து கரைந்து உருகத் தொடங்கிவிட்டீர்கள். உணர்ந்து திருந்தி நடக்கவும் முனைந்துவிட்டீர்கள்! இதுதானே மனிதன் – மனத்தை உடையவன் – என்பதற்குரிய அடையாளம். இதில் வெட்கப்படவோ வேதனைப்படவோ என்ன உள்ளது?

'பிறந்தது தொட்டே ஒருவர் நல்லவராக இருப்பது அருமை அன்று! பெருமையும் அன்று ஏன் எனில், நல்வழியே அவர்கள்பிறப்பு முதல்

கொண்ட பெரும் பாடமாக அமைந்துவிட்டது. ஆனால், தீ வழிப் போனவர்கள் திருந்தி நல்வழி நடப்பதுதான் அரிதினும் அரிது. அவ்வரிய தன்மை உங்களை நாடித் தேடி வந்துள்ளது என்றால் எவ்வளவு பெருமைப்படவேண்டும்.

'அப்பா சொல்லைக்கேட்டு நடந்திருந்தால், அவர் போக்குப்படி, பின்பற்றிச்சென்றிருந்தால் இவ்வளவு வந்திருக்கமுடியாது. ஆனால், உலகில் உயர்ந்த பெருமக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். எத்துணை வறுமையில் வாடி வதங்கினாலும்கூட அவர்கள் வகைகெட்ட செயல் புரியமாட்டார்கள் என்பதை நான் இவ்வளவு தெளிவாக அறிய வாய்ப்பு ஏற்பட்டு இருக்காது.

இவ்வாறெல்லாம் அவள் எனக்கு அன்று உரைத்த உரைமணிகள் என் காதில் இப்பொழுதும் ஒலித்துக்கொண்டுதானே இருக்கின்றன.

அவள் அருள் உரையே எனக்கு அறவுரையும் ஆயின. திருத்துவதற்கு ஏற்பட்ட சூழ்நிலையை அறிந்தேன். திருத்துபவருக்கு வேண்டிய உள்ளப்பாங்கையும் உணர்ந்தேன். அழிவிலே ஊறிக்கிடக்கக்கூடிய நேரத்தில் பிறர்கூறும் நல்லுரை எப்படிப் புன்மையாய்ப் போய்க் கெடுகின்றது என்பதைத் தெளிந்தேன். தெளியவைத்தாளே அவளை நெஞ்சாரப் போற்றுகிறேன்.

கருங்குழலால் திருந்தினேன். இனி அனைவரையும் திருத்த முயல்வேன். அவள் ஒருத்தியால் எத்துணை பேர்கள் இன்னல் தவிர்கின்றனர்! என்ன உணர்ச்சியடா இது! கொழுத்துச் சென்று கொண்டிருக்கும் உணர்ச்சி ஒரு கோணத்தில் திடீரென்று மாற்றங் கொண்டு குப்புற விழுந்துவிடுகின்றதே! இத்தகைய நல்ல மாற்றம் எளிதாய் ஏற்படாதா? ஏற்படுத்தவும் மாட்டார்களா? ஏற்படுத்துபவர்களுக்கு உலகில் ஆதரவும் இல்லையா? அல்லது ஏற்படுத்த முனைபவர்களுக்கே இடையூறு விளைத்து அழித்துவிடுகின்றனரா? எது உண்மை?.

### 3. பூங்குன்றன்.

"இன்பத்தின் எல்லை எல்லாம் கண்டதாகக் கருதினேன்; இடைவழியில் இப்படியா முடிந்துவிடவேண்டும். வாழ்வதற்கு இவ்வையகத்தில் வழியே இல்லையா? குற்றம் செய்தவர்களுக்குத்தான் கொடுந்தண்டனை தருவது உண்டு. குற்றம் செய்தவருக்கும் நல்லன செய்து நாணவைக்க வேண்டும் என்பது தமிழகம் கண்ட நன்னெறி. குற்றம் எதுவும் செய்தறியாத எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கொடுமைகளை என்னென்று சொல்வது!

"நான் காதல்கொண்டது குற்றமா? உண்மையாகவே ஒருத்திமீது உயிரன்பு கொள்வது குற்றமா? காதல் இலக்கணம் கண்டு, இலக்கியமும்கண்டு, வாழ்வாகவும் கொண்டு வாழ்ந்த காதல் தமிழ் உலகத்தில், காதல் கொள்வது குற்றம் என்று கொள்ளப்பெற்றால் அக்கொடுமைக்கு இணையான அறக்கொடுமை இல்லவே இல்லை.

'அன்பிலே தோய்ந்து, உணர்விலேபின்னி, உயிரோடு கலந்த எங்கள் இயற்கைத் தெய்வக் காதல்வாழ்வை உற்றாரும், ஊராரும், உலகும் குற்றமானது என்று கூறிவிட்டால்மட்டும் குற்றப்பட்டுப் போய்விடுமா? இந்தப் பொருளற்ற குற்றத்திற்காகச் சற்றும் எண்ணிப்பாராமல் நடுக்காட்டிலே வைத்துக் கொன்றுதீர்த்துவிட முடிவு கொண்டுவிட்டார்களே! பிறர் அழிவைக் காண்பதிலே எவ்வளவு பெருமகிழ்ச்சி அவர்களுக்கு! அந்தோ அவர்களின் அறிவின்மைக்காக இரக்கப்படத்தான் வேண்டும்.

'என் இதயச் செல்வியே! நீ இப்பொழுது எந்நிலைமையில் இருக்கின்றாய்? என்னைப்பற்றி ஏதேனும் அறிந்துகொள்ள உனக்கு வாய்ப்பு உண்டா? எங்கே என்னைப்பற்றி அறிந்து கொள்ளமுடியும். அடுத்தவீடு செல்வதற்குள்ள உரிமையை எப்பொழுதோ இழந்துவிட்டாய், கொல்லைப்புறத்தே செல்வதற்கும், திண்ணைப்புறம் வருவதற்கும்கூடத் தடுப்புக் காவல்கள் ஏற்பட்டுவிட்டன. தேடிவந்து பேசுபவர்களுக்கும் திடுக்கிட்டுத் துயரங்கள் விளைத்து தருகின்றனர். இந்நிலைமையில் என்னைப்பற்றி அறிவிப்பார் எவர்? அறிய வாய்ப்புத்தான் என்ன?.

'இப்பொழுதே கொடுமையின் எல்லைக் கல்லாக நிமிர்ந்து நிற்கின்றான் உன்னை மணக்க விரும்பும் உன் மாமன். நீயும் உன் தந்தையின் கெஞ்சுதலுக்காகவும், அஞ்சுதலுக்காகவும் நெஞ்சகக்காதலை ஒழித்து அவன் வீட்டுக்குச் செல்ல ஒப்பிவிட்டால் என்ன கொடுமை செய்வானோ? அவன் கொடுமைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு எவ்வளவு காலம் தான் வாழ்வாயோ? எப்படித்தான் வாழ்வாயோ?.

'கண்ணே! உன் மனதை மாற்றிக்கொண்டாவது உன் மாமன் மனப்படி அவனை மணந்து கொண்டால்கூட மகிழ்வேன். ஆனால் உன் மனம் அதற்கு ஒப்புமா! ஒப்பினாலும் உன் மாமன் மனத்தே இரக்கத்திற்கும், அன்புக்கும் எள்ளளவேனும் இடம் உண்டா! காதலை விட்டுக்கொடுத்தும் வாழ முன்வரும் பெருந்தகைமையைப் பாராட்டும் அளவுக்குப் பெருந்தன்மைபடைத்தவனா அவன்!.

'காண்பதற்கே வகை இல்லாதபடி செய்துவிட்ட அவன் நாம் திருமணம் செய்துகொண்டு இன்பமாக வாழ்வதற்கா விட்டுவைப்பான். உன்னை உயிருள் உயிராகவைத்துப் பாராட்டும் உன் தந்தையாராலேயே உனக்கு உதவ முடியவில்லையே. உன்மனப்படி திருமணம் செய்துகொண்டு வாழவைக்கும் வண்ணம் உறுதிப்பிடியாக நிற்கமுடியவில்லையே! பிறகு உன் மாமனைக் குறை சொல்லலாமா?.

# அண்ணாப் பத்து

மு. வில்லவன்

1. அழகுத் தமிழில் அடுக்குமொழி பேசி
எழிலை வளர்த்த திரு.

2. நாடுயர; நன்மொழி யோங்க; இனம் காக்கப்
பாடுகின்ற நல்லக் குயில்.

3. நல் கட்டுப் பாடு; கடமை;யுயர் கண்ணியம்;இன்
சொல்லழகும் தந்த திரு.

4. மூன்றெழுத்தில் நல்கழகம்: முக்கொள்கை நன்கமைத்து;
மூன்றெழுத்துக் கொண்ட திரு.

5. நாட்டிற்கே ஓரண்ணன்: நல்லறிஞர் போற்றுள்ளக்
கூட்டிற்கும் அண்ணா அவர்.

6. அஞ்சா[து] எடுத்துரைத்[து] ஆக்கப் பணி புரியும்
எஞ்ஞான்றும் போற்றும் திரு.

7. எழுத்திலும் பேச்சிலும் வல்லவர் போற்றும்
பழுத்த கனித் தமிழ் நெஞ்சு.

8. சிறைபல கண்[டு] இன்னல்பல ஏற்றுத் தமிழின்
குறைபல நீக்கும் திரு.

9. துரைக்குத் தலைநகர் 'காஞ்சி'வள நாட்டின்
துரைக்குப்பட்ட ராணியுண்டு காண்.

10. தமிழர் உயரத்தன் வாழ்வை அளிக்கும்
அமிழ்தத் தலைவர் அண்ணா.

---

# கொடுமை அரசே!

இலக்குவனாரை விலக்கிய அரசு நிலைக்குமா!
இன்னலைப் புகுத்திய அரசு இருக்குமா!
வாழ்க்கையைப் பறித்த அரசு வாழுமா!
வல்லமையை இழந்த அரசு போகுமா!
உண்மையை மறைத்த அரசு உலாவுமா!
உத்தமனை ஒழித்த அரசு ஒழியுமா!
கொடுமையைப் புரிந்த அரசு கோலோச்சுமா!
கடுமை செய்த அரசு கழியுமா!
அன்பைப் பிரிந்த அரசு ஆளுமா!
அறிவை அழிக்கும் அரசு அழியுமா!

கமுதூர் சிந்தனைத்தோழன்

# மன்னுயிர் போற்றிய



இருபதாம் நூற்றாண்டின் விந்தை மாந்தராக, மன்னுயிர் ஓம்பிய இனியராக, நேர்மைக் கோல் பிடித்து நெஞ்ச ஏட்டில், நிலைத்த புகழ் வடித்த எழுத்தாளராக, அமைதிப்பணியில் நோபல் பரிசு பெற்ற அறிஞராக மருத்துவ வள்ளலாக வாழ்ந்து மறைந்தார்.

ஆல்பர்ட் சுவைட்சரை அகல் உலகத்திற்கு அளித்து அரும்புகழை அள்ளிக்கொண்டது, ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்தாம் ஆண்டு. இட்லர் பிறந்த செர்மனி நாட்டினரான இவர் "என்கடன் பணி செய்து கிடப்பதே" "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற பாடுபுகழ் நெறியில் பீடு நடை போட்டார்.

ஆல்பர்ட் சுவைட்சர் வாழ்க்கையிலிருந்து அருந்தமிழர் அறியவேண்டியவை: உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல், துன்பம் உறவரினும் துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை செய்தல், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல், புகழ்பட வாழ்தல்.

# மாபெரும் தொண்டர்

பஞ்சணையில் புரண்டு பனி போல் மறையாமல், பல்லுயிர்கள் நெஞ்சணையில் புரண்டு நீடுபுகழ் குறையாமல் நின்றார். இருள்நிறையாமல் இன்னொளி படர, இன்னல் அறையாமல் நல்வழி தொடரக்குறள்நெறியில் சென்றார். கொண்டார் பெரும்புகழ்; கண்டார் அருள் நிலை.

ஞாயிறாக,க் 'குறள்நெறி' போற்றிக் குறிக்கோள் வென்ற சூரவராக, உயிர்த்தொண்டே உண்மைத் தொண்டென்று உள்ளத்தில் எண்ணி உழைத்த உரவோராகச் சிறிதுபேசிப் பெரிது செய்த செம்மலராகச் சிறந்து, பெருஞ்சீர் நாட்டிய **ஆல்பர்ட் சுவைட்சர்** பேருலக மக்கட்கெல்லாம் ஒரு பொருத்தமான வழிகாட்டி!

அறியாமையைப் போக்கும் புரட்சி அறிஞர்களாலேஉயர்-குறிக்கோள் போற்றும் உண்மைத்தொண்டர்களாலே, அஞ்சாநெஞ்ச ஆருயிர் அன்பர்களாலே, வையம் சிறக்கும்;

அமைதி வாழ்வில் ஆக்கப் புத்தொளி பிறக்கும் என்ற அன்னாரின் அறிவுரையை ஓர்ந்து, அதன்வழி நடத்தலே நங்கடமை. ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க; நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே இன்னே செய்க! இவ்வுலக வாழ்வில் இன்பம் பெய்க!

உண்மை வாழ்கிறது; உயிர்கள்தம் சதித்துயர் போக்கும் உயர் குறிக்கோள் வாழ்கிறது. பண்புடைமை பட்டொளி வீசிப் பறக்கிறது. அன்பு, அருள், ஆற்றல் அத்தனையும் பேருலகில் அமைந்து சிறக்கிறது. பின் ஏன் இறக்கிறார் **பல்லுயிர் போற்றிய பரிதி ஆல்பர்ட் சுவைட்சர்**! இறந்தாரா...! இல்லை....

வாழ்கின்றார் வாழ்கின்றார் நம்மிடை வள்ளலார் **ஆல்பர்ட் சுவைட்சர்.**

— "முருகபாரதி"

வெளியிடுபவரும் அச்சிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனார். அச்சிட்டது: குறள்நெறி அச்சகம்
திருப்பரங்குன்றம், மதுரை-5. தொலைபேசி எண்: திருநகர் 65